
Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 20 இதழ் - 12 டிசம்பர் - 2007




## கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. தேவனிடத்தில் விசுவாசம் ........ 10
3. பெண்கள் பகுதி ........ 13
4. வாலிபர் பகுதி ........ 16
5. சிறுவர் பகுதி ........ 19
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 21
7. கழுதையிடமிருந்து ........ 26
8. இரத்த சாட்சிகள் ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 20 DECEMBER . 2007 Issue - 12


ஆசிரியர் உரை

## கர்த்தருக்குப் பண்டிகை

நமது தாய்மொழியமாம் தமிழ் மொழியில், மனிதனைச் சுண்டி இழுக்கும் வார்த்தைகள் சில உண்டு. அவைகளில் ஒன்று "பண்டிகை" என்னும் நான்கெழுத்து வார்த்தை. எப்படியெனில், பண்டிகை என்று கூறினால், பாமரனுக்கு எப்படிப் பரவசம் உண்டாகிறதோ, அதுபோல படித்தவனுக்கும் உண்டாகிறது. கிராமத்தில் குடியிருப்பவனுக்கு எப்படி குஷி ஏற்படுகிறதோ அதுபோல நகரவாசிக்கும் ஏற்படுகிறது. இளைஞர்களை எப்படி இனந் தெரியாத ஒரு குதூகலம் தாக்கித் தடுமாற வைக்கிறதோ, அதுபோல பெரியவர்களையும் தாக்கித் தள்ளாட வைக்கிறது. சொல்லப் போனால், இந்தக் குதூகல உணர்வு, வியாதிப்படுக்கையிலிருப்பவர்களைக் கூட விட்டு வைப்பதில்லை. மொத்தத்தில், பண்டிகை என்பது, எல்லாத் தரப்பு மக்களையுமே பாதிக்கிறது. இப்பாதிப்பு, ஒரு குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்டது என்று நாம் எண்ணத்தேவையில்லை. எப்படியெனில், பண்டிகை தரும் குதூகல உணர்வுக்கு தேசமோ, இனமோ, மதமோ, மொழியோ கட்டுப்பாடு விதித்து குறுக்கே நிற்பதில்லை. பண்டிகையும், பண்டிகை மயக்கமும் மனித இனம் முழுமைக்கும் பொதுவானது. இந்த மயக்கம் உச்சத்திலிருக்கும் போது, "விழாக்கால சலுகை" என்று கூறி வியாபாரிகள் தங்களைக் கொள்ளையடிக்கிறார்கள் என்பதைக் கூட இவர்களால் அப்பொழுது உணர முடிவதில்லை.

இப்படி எல்லா தரப்பு மக்களையும் ஏகமாய் பாதித்திருக்கும் பண்டிகை காரியங்கள், மனிதனால் எழுதப்பட்டு, "இறைநூல்கள்" என்று மனிதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் ஏனைய நூல்களில் இருப்பது போல்,

பரலோகத்தின் தேவனால் மனிதர்களுக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டிருக்கும் பரிசுத்த வேதாகமத்தின் முதல் பகுதியாகிய பழைய ஏற்பாட்டிலும் உண்டு. பழைய ஏற்பாடு என்று நான் அழுத்திக் கூறுவதற்குக் காரணம், **சிலுவைக்குப் பின்னால் வாழும் நாம் பின்பற்றும்படியாய் நமக்குக் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டில்,** "பண்டிகை" என்பது இல்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டுமென்பதே. பழைய ஏற்பாட்டிலே பண்டிகைகளைக் கொடுத்த தேவன் (யாத். 23:16; லேவி 23:4-8, லேவி 23:34-44), புதிய ஏற்பாட்டிலே ஏன் கொடுக்கவில்லை என்று நீங்கள் கேள்வி எழுப்பினால், என்னிடத்தில் அதற்கு பதிலில்லை. ஒருவேளை பக்தன் யோபு சொல்லுவது போல, "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" (யோபு 1:21) என்று வேண்டுமானால் சொல்வேன். தேவன் செய்வதை ஏன் என்று கேட்க மனிதர்களாகிய நமக்கு என்ன நாதி இருக்கிறது?.

சரி, விஷயத்துக்கு வருவோம். உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ சமுதாயத்திற்கு டிசம்பர் மாதம் வந்து விட்டாலே போதும், கேட்கவே வேண்டாம். எப்படா நவம்பர் முடியும் என்று காத்திருப்பது போல, பண்டிகை கொண்டாட்டத்திற்கான வேலைகளை வெகு விமரிசையாக ஆரம்பித்து விடுவர். பாடலுக்கான பயிற்சி என்ன, ஆட்டம் பாட்டத்திற்கான ஆயத்தம் என்ன, ஊர் வலத்திற்கான முன்னோட்டம் என்ன என்று, பட்டிக்காடு துவங்கி பட்டணம் வரை களைகட்டிவிடும். இவ்வேலைகளில் போட்டியும் இருக்கும், பொறாமையும் இருக்கும். சில நேரங்களில் நிலைமை கைமீறிப் போகும் போது, கைகலப்பும் சேர்ந்து கொள்ளும். நான் சொல்லும் இவைகளெல்லாம் யதார்த்தமானவைகள் என்பது நடப்புகளை நன்றாக கவனிப்பவர்களுக்குப் பளிச்செனப் புரியும்.

கர்த்தர் புதிய ஏற்பாட்டில் கட்டளையிடப்படாத ஒரு பண்டிகைக்கு, கிறிஸ்தவ சமுதாயம் வெகு விமரிசையாகக் காரியங்களை காலங்காலமாக நடப்பிப்பதைப் பார்த்தால், பழைய ஏற்பாட்டின் காலத்தில் **கர்த்தருக்குப் பண்டிகை** என்று **கர்த்தருக்குப் பிடிக்காத ஒன்றை** இஸ்ரவேல் ஜனங்கள் செய்தது தான் நினைவுக்கு வருகிறது. அந்தச் சம்பவம் யாத் 32:1-8 வசனங்களில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்ன என்று தெரிந்து கொள்ளுவதற்கு முன் நமது வழக்கத்தின்படியாக, பின்னனி பற்றித் தெரிந்து கொள்ளுவோம்.

நாற்பது நாட்களில் கடக்க வேண்டிய வனாந்திரத்தை நன்றி கெட்ட இஸ்ரவேல் ஜனங்கள் 40 ஆண்டுகள் சுற்றித் திரிந்தனர் என்பது நாமறிந்ததே (எண் 14:32-34). ஆனால், நமது தலைப்புக்கான சம்பவம் எகிப்தின் விடுதலைக்குப் பின், ஓர் இரண்டு மாதங்கள் கழித்து நடந்துள்ளது. யெகோவா,

அவர்களை எப்படி வல்லமையாய் விடுவித்து, பாதுகாப்பாய் வழிநடத்தினார் என்பது பசுமரத்து ஆணிபோல் மனதில் இருந்திருக்க வேண்டிய சந்தர்ப்பம் அது. ஆனால், அவர்கள் அவைகளனைத்தையும் தண்ணீர் தாரைகள் போலாக்கி செயல் பட்டுள்ளனரென்பது வேதனையான செயல்.

எகிப்தில் தறிகெட்டு வாழ்ந்தவர்கள் தன்னண்டை வந்த பிறகு தடம் புரண்டு போய்விடக்கூடாது என்று எண்ணிய கரிசனையுள்ள தேவன், பிரமாணங்களைக் கொடுக்கும்படி மோசேயை மலைக்கு அழைத்தார். முதல் முறை, சகோதரனாகிய ஆரோனோடு சென்ற மோசே (யாத். 19:24). இரண்டாம் முறை, ஆரோனையும், ஊரையும் ஜனங்களைப் பார்த்துக் கொள்ளும்படி பாளையத்தில் **நம்பிக்கையோடு விட்டுவிட்டு** (யாத் 24:14). யோசுவாவோடு சென்றான் (யாத். 24:13) திரும்பி வருவதற்கு, அவர்கள் எதிர்பார்த்ததை விடக் காலம் அதிகமாகிவிட்டது. அதனால் என்ன, தேவ அழைப்பை ஏற்றுத்தானே போயிருக்கிறான். பொறுமையோடு காத்திருக்க வேண்டியது தானே நியாயம்.

ஆனால், என்ன நடந்தது? "மோசே மலையிலிருந்து இறங்கி வரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்ட போது, அவர்கள் ஆரோனிடத்தல் **கூட்டங்கூடி,** அவனை நோக்கி; எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் நீர் எழுந்து, எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டு பண்ணும் என்றார்கள்" (32:1) எப்படியிருக்கிறது பாருங்கள்! இப்படி முரண்டு பிடித்த இந்த ஜனங்கள் யார்? எகிப்தியருக்கு எதிரான 10 வாதைகளை எகிப்திலே கண்டு, செங்கடலின் நடுவே வெட்டாந்தரையில் நடப்பது போல நடந்து வந்து (யாத். 14:22), துரத்தி வந்த பார்வோனின் சேனை செங்கடலுக்குள் மூழ்கிப் போனதை (யாத். 15:41) கண்ணாரக் கண்டவர்கள். இவர்கள் செயலைப் பார்த்தால், "அடக்கடவுளே", என்று சொல்லுவதைத் தவிர வேறு ஒன்றும் புலப்படவில்லையே! நன்றி கெட்டவர்கள் என்பதை விட, நன்றியை சுட்டுத் தின்றவர்கள் என்று சொல்லுவது தானே சரியாக இருக்கும்.

சரி, ஜனங்கள் தான் இப்படி, ஆரோன் எப்படி? ஜனங்கள் எவ்வளவோ மேல் என்பது போலல்லவா நடந்து கொண்டான். இத்தனைக்கும் இந்த ஆரோன் யார்? மோசே, தான் திக்குவாயும், மந்த நாவும் உள்ளவன் என்று சொன்னபோது (யாத் 4:10) அவனுக்கு வாயாக இருக்கும்படியாகத் **தேவனால் தெரிந்து** கொள்ளப்பட்டவன் (4:16). தன் சகோதரனாகிய மோசேயால் முழுமையாக **நம்பப்பட்டவன்** (24:14). ஆவியானவர், ஞானி சாலமோனைக் கொண்டு, "இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக் கிறான்" (நீதி 17:17) என்று கூறுகிறார். ஆனால், இந்த ஆரோனோ, இல்லை இல்லை, நான் இடுக்கண் செய்யவே பிறந்திருக்கிறேன் என்பது போலல்லவா நடந்து கொண்டான்.

எப்படியெனில், ஜனங்கள் **கூட்டமாகக் கூடி** எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை உண்டு பண்ணும் என்று சொன்னபோது, இவன் தன்னை அழைத்த தேவனையும் தன்னை நம்பிய மோசேயையும் மறந்தான். பெருங் கூட்டம், நீதியையும், நியாயத்தையும் பார்க்கக்கூடாதபடி இவன் கண்களை மறைத்துப் போட்டது. ஒருவேளை இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தைப் பாதித்து கொண்டிருக்கும் "மெஜாரிட்டி" என்ற பெருந்தீமைக்கு வித்திட்டவன் இந்த ஆரோன் தானோ? ஆம், சத்தியத்தினடிப்படையில் ஒன்று நீதியானதா இல்லையா என்று தீர்மானிப்ப தற்குப் பதிலாக, எத்தனை பேர் ஒரு செயலை செய்கிறார்கள் என்ற அடிப்படையில் தீர்மானிப்பது தான் சரியானதாக இருக்கும் என்ற நீதிக்கேட்டை கிறிஸ்தவம் இங்கிருந்து தான் கற்றுக் கொண்டதோ? அரசியலுக்கும், சமுதாயக் காரியங்களுக்கும் வேண்டு மானால் இந்த அளவுகோல் சரியாக இருக்கலாம், ஆனால், ஆன்மீக காரியங் களுக்கு இது ஒருபோதும் ஒத்து வராது. கூட்டம் தான், ஒரு செயலுக்கு அடிப்படை என்றால் அன்றைக்கு ஆரோன் செய்ததை தேவன் அங்கீகரித் திருக்க வேண்டும் தானே, ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை?

ஆரோனிடத்தில் அவர்கள் கேட்டது, "முன் செல்லும் தெய்வங்கள், வேண்டுமென்று. ஆனால் வசனங்கள், **தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்க வேண்டுமென்றே** கூறுகிறது (2கொரி 5:6). பெருங்கூட்டத்திற்கு மயங்கி அவர்கள் விருப்பத்திற்குச் செவிகொடுத்த ஆரோன், மனைவிகள், குமாரர், குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கும் பொன்னணிகளைக் கழற்றி வரும்படி சொல்லி, **பொன் கன்றுக்குட்டி** செய்து, **உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே** என்றான் (யாத். 32:2-4). யெகோவாவுக்கு மாற்றாகக் கன்றுக்குட்டியாம். அய்யோ, கன்றுக்குட்டியா இவர்களை அழைத்து வந்தது? கன்றுக்குட்டியா பத்து வாதைகளை நடப்பித்தது? கன்றுக்குட்டியா செங்கடலைப் பிளந்தது? கன்றுக்குட்டியா பார்வோனின் சேனையை மூழ்கடித்தது? ஆரோனின் வார்த்தைகளைப் படிப்பதற்கு நம்முடைய நாவும், கேட்பதற்குக் நம்முடைய காதும் கூசும் போது, தேவன் எப்படித்தான் இந்த அக்கிரமத்தையெல்லாம் பொறுத்துக் கொண்டாரோ!

இங்கேயாகிலும், இந்த ஆரோன் நிறுத்திக் கொண்டானா என்று பார்த்தால், அதுவும் இல்லை. "ஆரோன் கன்றுக் குட்டியைப்பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, **நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை** என்றும்" கூறினான் (32:5). ஏதோ, கர்த்தரும், அவருடைய காரியங்களும் இவன் கையிலுள்ள களிமண் என்னும் நினைப்பில். ஆரோனின் வார்த்தை களுக்கு ஜனங்களும், "மசை ஆட்டுக்கு மணியைக் கட்டினது போல", அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதான பலிகளைச் செலுத்தினார்கள். பின்பு, ஜனங்கள் புசிக்கவும், குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள் (யாத். 32:6).

ஒருபக்கம், ஆரோனும், பெருங்கூட்டமும் மறுபக்கம், பலிபீடம், சர்வாங்க தகனபலி, அதிகாலை எழுதல் என்று எல்லாமே பக்தியோடு சம்பந்தப்பட்ட காரியங்கள். அத்தோடு, ஆட்டம், பாட்டம், ஆர்ப்பாட்டம் என்று எல்லாமே சேர்ந்து கொண்டது. கண்களுக்கு முன்பாக அழகான ஒரு பொன்கன்றுக்குட்டி, அதற்காக பலிபீடம், தகனபலி, திரும்பின பக்கமெல்லாம் உற்சாகம் கரைபுரண்டு ஓடும் மக்களின் எழுச்சி என்று இப்படி எல்லாமே பார்ப்பதற்கு கண்கொள்ளாக்காட்சியாக இருந்திருக்கும். ஆரோனும், ஜனங்களும், ஆஹா, தேவனுக்காக இப்படியொரு பண்டிகையை கொண்டாடி முடித்துவிட்டோம் என்று பூரித்துப் போயிருந்திருப்பார்கள். அப்படித்தானே! ஆனால், "உன் நினைவுகள் என் நினைவுகள் அல்ல" என்று சொல்லும் தேவன், என்ன சொன்னார் என்று கொஞ்சம் அமைதியாகக் கவனியுங்கள்.

"அப்பொழுது, கர்த்தர் மோசேயை நோக்கி! நீ இறங்கிப்போ, எகிப்து தேசத்திலிருந்து நீ நடத்திக் கொண்டு வந்த **உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்**...." (யாத். 32:7,8) என்றார். ஆரோனும், ஜனங்களும் கர்த்தருக்காகச் சாதித்து விட்டோம் என்று நினைத்தபோது, கர்த்தர், "ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள்", என்று ஒரே போடாகப் போட்டிருக்கிறார். ஜனங்கள் கூட்டமாகச் சேர்ந்து கொண்டு, **கர்த்தருக்காக என்று கர்த்தர் பெயரில்** காரியங்களைச் செய்திருந்தாலும், கர்த்தர் அதை ஒரு பொருட்டாக எண்ணவுமில்லை, செய்யப்பட்டவைகள் தனக்காகச் செய்யப்பட்டவை என்று ஏற்றுக்கொள்ளவுமில்லை. எப்பொழுதுமே, ஒன்றைப்பற்றி நாம் என்ன நினைக்கிறோம் என்பது முக்கியமல்ல. தேவன் நம் செயலைக் குறித்து என்ன எண்ணுகிறார் என்பதே முக்கியம் புரிகிறதா?

இப்பொழுது, இப்படி வனாந்திர யாத்திரையின் ஆரம்பத்தில் நடந்த இச்சம்பவம் நமக்கு என்ன பாடங்களைக் கொடுக்கிறதென்று கவனிப்போம்.

## கர்த்தரும், பெருங்கூட்டமும்

"கர்த்தருக்குப் பண்டிகை" சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், திரளான பேர் சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்வதால் அது நியாயமாகி விடாது என்பது.

பொதுவாக நாம் ஒரு வழக்கத்திற்கு நம்மை உட்படுத்திவிட்டோம். அது ஓர் ஆட்சிக்கான அரசியல் தேர்தலாக இருந்தாலும் அல்லது ஓர் அமைப்புக்கான தேர்தலாக இருந்தாலும், பெரும்பாலானவர்கள் சொல்லுவதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது. ஒருவேளை, தீர்ப்பு நியாயமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அது தான் சரி என்று. இப்படி நாம் நம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டதாலோ என்னவோ, ஆன்மீக காரியத்திற்கு வரும்போது நாம் அதே வழிமுறையைப் பின்பற்றத்தான் துடிக்கிறோம். நீதி, அநீதி எதுவென்று பார்க்காமல், சத்தியம், அசத்தியம் எதுவென்று பார்க்க விரும்பாமல், பெரும்பாலானவர்கள் எதைச் செய்கிறார்களென்று பார்த்து, அதன் பக்கம் சாயவும், நிற்கவும் விரும்புகிறோம்.

ஆனால், தேவன், பெரும்பாலானவர்கள் ஒன்றைச் செய்கிறார்கள் என்பதற்காக ஒன்றை ஏற்றுக்கொள்ளுவதில்லை. நோவாவின் நாட்களில், கிட்டத்தட்ட பூமியின் மனுஷர் எல்லாருடைய இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததாயிருந்தபடியால் (ஆதி. 6:5,6), தேவன் அதை சரி என்று ஏற்றுக் கொண்டாரா? அல்லது இயேசுவின் நாட்களில், "... அவனைச் சிலுவையில் அறைய வேண்டும்" என்று எல்லாரும் ஏகமாய்ச் சொன்னபடியால் (மத். 27:22). அப்படிச் சொன்னது நியாயம் தான் ஆகிவிட்டதா? சொல்லுங்கள். பிரமாணங்களைக் கொடுக்க மலைக்கு மோசேயை அழைத்த தேவன், "தீமை செய்ய திரளான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக...." (யாத். 23:2) என்றல்லவா கூறியுள்ளார்.

ஆனால், இந்நாளில் வாழும் நமக்கு எப்படி, இந்த உண்மை தெரியாமல் தடுமாறுகிறோமோ, அதுபோல ஆரோனோடு அந்நாட்களில் இருந்தவர்களுக்கும் புரியவில்லை. ஆகவே தான், ஏகமனதாகக் கூட்டங்கூடி, ஆரோனையும் அதற்கு அடிபணியச் செய்துவிட்டால், பிறகு கர்த்தருக்கு நம்முடைய காரியத்தை அங்கீகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று எண்ணிக்கொண்டனர். ஆனால், கர்த்தரோ, **நீ நடத்திக் கொண்டு வந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள்** (யாத். 32:7) என்று சொல்லி அவர்களைக் கை கழுவி விட்டார். இங்கே கவனியுங்கள், யாத் 19:5ல் ஜனங்களே, **நீங்களே எனக்கு சொந்த சம்பத்து** என்று உரிமை கொண்டாடிய கர்த்தர், இங்கே, அந்த உரிமை வார்த்தைகளை வாந்தியெடுத்துவிட்டு, **உன் ஜனம்** என்கிறார். இதன் பொருள் என்ன? அவருடைய வார்த்தைகளைக் கேட்காத ஒருவனோ, அல்லது ஒரு கூட்டமோ, அவருடைய ஜனம் அல்ல என்கிறார். நாம் எத்தனை பேர் சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்கிறோம் என்பது தேவனுக்கு முக்கியமல்ல. மாறாக, நாம் அவருடைய காரியமாக என்ன செய்கிறோம் என்பதை உன்னிப்பாக கவனிக்கிறார்.

அப்படியானால், அருமையானவர்களே, தேவனுடைய பார்வையில் நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? ஆரோனுக்கு முன்பாக, ஜனங்கள் ஒருமனமுள்ளவர்களாக, கட்டுக்கோப்பானவர்களாக இருந்தார்கள். தங்கள் சொல்லுக்கும், விருப்பத்திற்கும் தங்களை வழிநடத்தின தலைவனை இணங்கவும் வைத்தனர். தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற அவனைச் செயல்படவும் வைத்தனர். ஒரு பெருங்கூட்டம் திட்டமிட்டபடியும், விரும்பிய படியும் எல்லாமே நடந்தது. ஆனால், கர்த்தர் என்ன சொன்னார். "ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டதாகவே சொன்னார்".

ஆகையால், நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில், நாம் பின்பற்றுகிற கொள்கையாக இருந்தாலும், நம்முடைய பக்தி விருத்திக்காக நாம் போய் கூடி ஆராதிக்கிற இடமாக இருந்தாலும் நாம் எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏமாந்து போகாமல், தேவனுடைய பார்வையில் நமது செயல் எப்படியிருக்குமென்று பார்த்து, பயத்தோடும், நடுக்கத்தோடும் பக்திக் காரியங்களை நிறைவேற்றுவோமாக!

## II கர்த்தரும், கன்றுக்குட்டியும்

கர்த்தருக்குப் பண்டிகை சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், கர்த்தருக்கு மாற்றாக ஒன்றை கர்த்தர் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பது.

நாம் வாழும் இந்தக்காலம் "எக்ஸ்சேஞ்ச் காலம்". ஒன்றுக்கு மாற்றாக இன்னொன்றை வாங்கும் காலம். ஆனால், ஒரு முட்டாள் கூட, தான் கொடுத்ததை விடக் குறைவான மதிப்புஇடைய ஒரு பொருளை வாங்க மாட்டான். ஆனால், நம்முடைய ஆரோன் தலைமையில் கூடின கூட்டம், கர்த்தருக்கு மாற்றாக கன்றுக்குட்டியை வாங்கியிருக்கிறார்கள். எழுதுவதற்கே எனக்கு வெட்கமாக இருக்கிறது. ஆனால், "ஆரோன் அன் கோ" விற்கு இதில் ஏக திருப்தி. இவர்களின் இந்த திருப்திக்கும், விடுவித்த தெய்வங்கள் இவைகளே என்று இவர்கள் ஏக மனதாக ஏற்றுக்கொண்டதிற்கும் காரணம் என்னவாக இருக்க முடியும்? கண்ணுக்குத் தெரியாத கர்த்தருக்குப் பதிலாக, தங்கத்தாலான, தகதக வென்று மின்னும் கண்ணுக்குத் தெரியும் ஒன்றை உருவாக்கிவிட்டோம் என்ற பெருமிதம் காரணமாக இருக்குமோ? இருக்கலாம்.

தங்கத்தால் $^1/_2$ பவுன் மோதிரம் செய்தால் கூட அது பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கும். அப்படியிருக்கும் போது, கிலோ கணக்கில் தங்கத்தை உருக்கி, அதை ஒரு அழகான கன்றுக்குட்டியாக வடிக்கும்போது நிச்சயம் சிறப்பானதாகவே இருந்திருக்கும். அதற்காக, அது ஜீவனுள்ள தேவனுக்கு மாற்றாகி விடுமா? தங்கமாக இருந்தால் தான் என்ன அல்லது அதைப் பார்க்கிலும் விலை உயர்ந்த வைரமாகவோ, வைடூரியமாகவோ இருந்தால் தான் என்ன? ஊமையான விக்கிரகங்கள் தேவாதி தேவனுக்கு மாற்றாகி விடுமா? ஆனால், இந்த ஆரோனுக்கும், நன்றிகெட்ட ஜனங்களுக்கும் கர்த்தருக்குக் கன்றுக்குட்டி மாற்று என்று ஏற்றுக்கொள்ள மனம் ஒத்துக் கொண்டு விட்டதே, அடப்பாவமே. ஆனால், தேவன் என்ன சொன்னார்? ஆஹா, **அருமையான மாற்று** என்று சொன்னாரா? இல்லை, ஜனங்கள் "தங்களைக் கெடுத்துக் கொண்டதாகவே" சொன்னார்.

அருமையானவர்களே, எப்படி கர்த்தருக்கு மாற்றாகக் கன்றுக்குட்டி இருக்க முடியாதோ, அதுபோலவே, **கர்ததருடைய சபைக்கு** மாற்றாகவும் எதுவும் இருக்க முடியாது. ஒருவேளை எப்படிப் பொன்கன்றுக்குட்டி தங்கத்தால் செய்யப்பட்டு, விலைமதிப்புள்ளதாகவும், அழகானதாகவும் இருந்ததோ, அதுபோல, கர்த்தருடைய சபைக்கு மாற்றானவைகள், பாரம்பரியப் பெருமை உடையவைகளாயிருந்து, விண்முட்டும் கோபுரங்களையும், அழகான தோற்றத்தையும் உடையதாயிருந்தது, எண்ணிக்கையில் அடங்காத ஜனங்களைக் கொண்டதாக இருந்தாலும், அவைகள், இயேசுவால் வாக்களித்து (மத். 16:18), அதர் தம் இரத்தம் சிந்தி சம்பாதித்த (அப். 20:28) சபைக்கு மாற்றாக முடியாது.

அப்படியானால், இதை வாசிக்கும் எனக்கன்பானவர்களே, நீங்கள் கர்த்தர், இரத்தம் சிந்தி சம்பாதித்த சபையில் அங்கமாக இருக்கிறீர்களா அல்லது பார்ப்பதற்கு அழகும், மதிப்பும் மிக்கதாகத் தெரியும் கன்றுக்குட்டி சபையில் அங்கமாக இருக்கிறீர்களா? கர்த்தருடைய பார்வையில் நீங்கள் உங்களைக் கெடுத்துக்கொண்டவர்களாகக் காணப்படாதபடி, கிறிஸ்துவின் சபையில் இன்றே அங்கமாகுங்கள்.

### III கர்த்தருக்குப் பண்டிகை

கர்த்தருக்குப் பண்டிகை என்ற சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், கர்த்தர் கட்டளையிடாத பண்டிகை கர்த்தர் ஏற்றுக் கொள்ளும் ஒன்றாக இருக்க முடியாது என்பது.

கர்த்தருக்கடுத்த காரியத்தில் ஒன்று சரியா, தவறா என்பது அந்தக் காரியம் குறித்து கர்த்தர் என்ன கட்டளை கொடுத்துள்ளார் என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும். அமலேக்கியரோடே நடந்த யுத்தம் முடிந்த பிறகு, ஒரு கட்டத்தில் சாமுவேல், சவுலைப் பார்த்து, "..... **நீ கர்த்தருடைய சொல்லைக் கேளாமல்,** கொள்ளையின் மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன என்றான்" (1 சாமு. 15:19). கர்த்தருடைய சொல்லைக் கேளாமல் செய்யும் எதுவும், **கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதே.** அதுபோலத்தான், இந்த ஜனங்கள் கடைபிடித்த பண்டிகையும். "நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை" என்று ஆரோன் தான் கூறினானேயொழிய, கர்த்தர் கூறவில்லை. கர்த்தருக்குப் பண்டிகை கூற ஆரோனுக்கு அதிகாரம் கொடுத்தது யார்? பண்டிகை கூறும்படி, ஆரோனை தேவன் அழைக்கவில்லை.

இந்த சம்பவத்தின், ஆரம்ப முதலே நாம் கவனித்தால், ஜனங்கள் ஒருவிதமான **மாயையான பக்தியில்** அப்படியே மூழ்கியிருப்பதை நாம் காணமுடியும். எப்படியெனில், நகைகளைக் கழற்றி வாருங்கள் (32:2) என்றபோது, பதில் பேசாமல் **கொண்டு வந்து** கொடுத்தார்கள். இது எதைக் காட்டுகிறது? இவர்கள் கொடுக்கும் குணமுடையவர்களாயிருந்தார்கள். நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை என்று சொன்னது தான் தாமதம், **அதிகாலமே எழுந்து விட்டார்கள்.** அத்தோடு, தகன பலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்தியிருக்கிறார்கள். இது, ஜனங்கள் பக்திக் கடைமை களைச் செய்ய ஆர்வமுடையவர்களாக இருந்திருக்கிறார்களென்பதையே காட்டுகிறது (32:6).

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், பண்டிகை என்ற பெயரில், இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் செய்யும் சகல சித்து வேலைகளும் அவர்களாலும் செய்யப்பட்டிருக்கிறது. இவர்களல்லவா பக்திமான்கள் என்று பார்ப்போர் நினைக்கும்படியானதொரு தோற்றமும் இருந்தது. அத்தோடு, நம்மவர்கள் போலவே, புசிக்கவும், குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்துமிருக்கிறார்கள். பண்டிகைக்காக விசேஷமாகக் கொடுப்பது, அதிகாலையிலே எழுவது, சடங்காச்சாரங்கள் செய்வது, பிறகு குடியும், கும்மாளமும் என்று இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் டிசம்பர் மாதத்தில்

செய்கின்ற காரியங்களனைத்தும் அப்படியே இருந்திருக்கிறதே. எப்படி அவ்வளவு ஒற்றுமை? ஒருவேளை இன்றைய கிறிஸ்துமஸ்-ஐத் தான் வேறு பெயரில் கொண்டாடியிருப்பார்களோ?!

இப்படி இவர்களின் பண்டிகை சம்பந்தப்பட்ட காரியங்களில் ஆரோனுக்கும், ஜனங்களுக்கும் பரம திருப்தி. ஆனால், கர்த்தருக்கு? கடும் எரிச்சல். அதிகாலையில் எழுந்தது முதல், இவர்கள் பக்திக்காகச் செய்த காரியங்களனைத்தையும் கவனித்தால் கர்த்தர் கண்டிப்பாக இவர்கள் காரியங்களை ஏற்றுக் கொள்வார் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஆனால், கர்த்தரோ ஜனங்கள் **தங்களைக் கெடுத்துக் கொண்டதாகச் சொல்லுவதோடு, நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்** என்று கூறுகிறாரே! ஏன் இப்படி? சிந்தியுங்கள் (32:7,8).

அன்பானவர்களே, கர்த்தர் கட்டளையிடாத எதையும் நாம் ஒருபோதும் செய்யக்கூடாது. ஆரோனைப் போன்று, எவ்வளவு பெரிய மனிதன் பண்டிகை என்று கூறி அதைத் தலைமை தாங்கி நடத்தினாலும் அது பற்றிக் கவலையில்லை. ஆரோனாக இருந்தால் என்ன, வேறு யாராக இருந்தால் என்ன? அவர்கள் எல்லாரும் மனிதர்களே. தேவன் கட்டளையிடாத ஒன்றை யார் சொல்லிச் செய்தாலும், எத்தனை பேர் சேர்ந்து செய்தாலும், எவ்வளவு ஆர்ப்பாட்டத்தோடு செய்தாலும் அதில் பயன் ஏதும் இல்லை. தேவனுடைய பார்வையில், நாம் நம்மைக் கெடுத்துக் கொண்டவர்களாகவே காணப்படுவோம்.

இந்த அடிப்படையில், இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் கொண்டாடும் பண்டிகைகளை எண்ணிப்பாருங்கள். இதற்கு வேத ஆதாரங்கள் எங்கே இருக்கிறது?. நீங்களாகவே, நெஞ்சிலே கை வைத்துச் சிந்தித்துப் பாருங்கள். அப்பொழுது, கர்த்தரின் பார்வையில் நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோம் என்பது மனசாட்சியுள்ளவர்களுக்குப் புரியும். இதன் மூலம், இனிமேல், நாம் தேவனுடைய பார்வையில் எப்படியிருக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்க முடியும்.

நாம் ஒவ்வொருவரும், தேவனுடைய பார்வையில், நம்மைக் கெடுத்துக் கொள்ளாதவர்களாகவும், தேவன் விதித்த வழியை விட்டு விலகாதவர்களாகவும் காணப்படுவோமாக! ஆமென்!!

**அனைவருக்கும் அடியேனின் குடும்பத்தின் சார்பாகவும், "எக்லீசியா வேதாகமக் கல்லூரி"யின் சார்பாகவும், "திருமறை தியானம்" தொலைக்காட்சி நேயர்கள் சார்பாகவும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.** - ஆசிரியர்.

**"திருமறை ஆசான்"** இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர், எங்களோடு தொடர்பு கொண்டு புதுப்பித்துக் கொள்ளுங்கள் – ஆசிரியர்.

# தேவனிடத்தில் விசுவாசம்

எபிரேயர் ஆசிரியர் சொல்லும் போது, "**விசுவாசமானது, நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது**" (எபி. 11:1). விசுவாசத்தை, நம்பிக்கை, நம்பப்படுவதின் உறுதி, தைரியம், ஏற்றுக் கொள்ளுதல் என்றும், கீழ்ப்படிதலை உண்டாக்கும் ஒன்று என்றும் சொல்லாம். இந்த அடித்தளத்தின் மீதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை ஆரம்பமாகிறது. அதின் மீது தான் அது நிலை நிற்கிறது.

எபிரேய ஆசிரியர் சொல்லுகையில், "**விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மை தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் என்கிறார்**". (எபி. 11:6) தேவனை விசுவாசிப்பதற்கு இரண்டு காரியங்கள் தேவையென்பதை நீங்கள் இங்கே கவனிக்க வேண்டும். முதலாவது, அவர் உண்டென்று ஒருவன் விசுவாசிக்க வேண்டும். இரண்டாவதாக, அவரைத் தேடுகிறவர்களுக்கு அவர் பலனளிக்கிறவர் என்று நம்ப வேண்டும். அதற்கு குறையான எந்த விசுவாசமும் ஏற்புடையதாக இருக்குமா?.

நம்மை சுற்றி இருக்கும் காரியங்களை நாம் பார்த்து விட்டு பரலோகத்தின் தேவன் ஒருவர் உண்டென்று நம்பாமலிருப்பது எப்படி? வானம், பூமி, மிருகம், மனிதகுலம் இவை அனைத்துமே சிருஷ்டிகள் உண்டென்பதைத்தானே காட்டுகிறது. தாவீது சொல்லுகையில், வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. (சங். 19:1) தேவன் இல்லையென்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான். அவர்கள் தங்களை கெடுத்து அருவருப்பான கிரியைகளை செய்து வருகிறார்கள். நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை (சங். 14:1).

தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசித்தால் மாத்திரம் போதாது. இயேசுக் கிறிஸ்து அவருடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும். கிறிஸ்து தாமே சொன்னார் "**உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்**" (யோவான் 14:1) இன்னும் அநேக வசனங்கள் நமக்கு இதை வெளிப்படுத்து கிறது. கவனியுங்கள். "**தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப் போகாமல்,**

**நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்"** (யோவான் 3:16). **"அப்பொழுது, இயசு சத்தமிட்டு, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரி டத்தில் விசுவாசமாயிருக்கிறான்"** (யோவான் 12:44) என்றார்.

கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களைப் பற்றி நாம் என்ன சொல்லுவோம்? வேதாகமம் இப்படிப்பட்டவர்களைக் குறித்தும் எழுதியிருக்கிறது. கிறிஸ்து சொல்லுகையில் **"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்"** (யோவா 3:18). குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை.

**"தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்"** (யோவா. 3:38). **"ஆகையால், நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன். நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்"** (யோவான் 8:24).

நாம் கண்ட வசனத்தில், தேவனை விசுவாசித்தால் வரும் நன்மைகளை, ஆசீர்வாதங்களை பார்த்தோம். ஆனால், அதே சமயம், அப்படி நம்பாதவர்களுக்கு சாபங்களும், அய்யோக்களும், தண்டனைகளுமிருப்பதையும் நாம் கண்டிருக்கிறோம்.

ஆனால், தேவன் பேரிலும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் பேரிலும் நாம் எவ்வளவாக அன்பு வைக்க வேண்டும்? அவர்களை மனதளவில் ஏற்றுக்கொண்டால் போதுமா? தேவனுடைய வார்த்தைகள் நம்முடைய விசுவாசத்தை நாம் வெளிப்படுத்த வேண்டும் என்கிறது. உதாரணமாக கிறிஸ்து சொல்கையில், **"என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?"** (லூக். 6:46). மீண்டும் அவர் வலுயுறுத்துகையில், பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானனேயல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே, கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். **"அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்"** (மத். 7:21-23). இந்த

ஜனங்கள் பக்தியுள்ளவர்கள் தான், அது மாத்திரமல்ல பக்திக்கான கிரியைகளும் செய்திருக்கிறார்கள். ஆனால், தவறு எங்கு நடந்தது? பரலோக பிதாவின் சித்தத்தின்படி அவர்கள் செயல்படவில்லை.

கர்த்தர் நம்மை என்ன செய்யச் சொல்கிறாரோ அதை செய்யுமளவிற்கு அவர்மீது நாம் விசுவாசம் வைக்க வேண்டும். ஆகையால் தான், "**விசுவாசம் மாத்திரம்**" நம்மை இரட்சிக்க முடியாது. அது செத்ததாக இருக்கிறது. யாக்கோபு எழுதுகையில், "**அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதான் செத்ததாயிருக்கும்**" (யாக். 2:17) அவர் தொடர்ந்து சொல்கையில், "**ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திர மல்லாமல், கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே**" (யாக். 2:24). இறுதியாக, "**அப்படியே ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது**" (யாக். 2:26) நாம் பார்த்த இந்த வசனங்களில் நம்மை இரட்சிப்பதற்கு "**விசுவாசம் மாத்திரம்**" போதாது என்று வலியுறுத்துகிறார்.

சில நேரங்களில் யோவான் 3:16ஐ சில போதகர்களும், பிரசங்கியாரும் "விசுவாசம் மாத்திரம்" போதும் என்று நிரூபிக்க பயன்படுத்துவார்கள். ஆனால் கிறிஸ்துவே அங்கு விசுவாசம் மாத்திரம் போதும் என்று சொல்லவில்லை. மாறாக, விசுவாசித்தால் நாம் இழந்து போகாமல் நித்திய ஜீவனை அடைவோம் என்றுதான் சொல்கிறார். கேள்வி யாதெனில், ஒருவன் தேவனையும், அவருடைய வார்த்தையையும் விசுவாசித்தால் என்ன செய்வான்? அவன் கர்த்தருக்கு கீழ்ப்படிவான், அதுதான் அவர் சொல்லுகிற கருத்து.

ஆம், **நாம் விசுவாசித்தால் நீதிமானாக்கப்படுகிறோம் (ரோமர் 5:1). ஆனால், விசுவாசத்தினால் மாத்திரமல்ல. கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம்** (அப். 2:8,9). ஆனால் விசுவாசத்தினால் மாத்திரமல்ல.

இறுதியாக எபே. 4:5-ல் **ஒரே விசுவாசம் உண்டென்று வேதம் சொல்கிறது**. நமக்கு ஒரே வேதாகமம் உண்டு. நாம் அதை ஏற்றுக்கொண்டு விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிய வேண்டும். அப்படி கீழ்ப்படிகிறவர்களை கர்த்தர் தமது சபையில் சேர்த்து கொள்கிறார். ஆமென்.

**ஜே.சி. சோட்.** **J.C. CHOATE**

**பெண்கள் பகுதி**

# சபை வளர்ச்சியில் உதவி

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, இந்த வருடத்தின் இறுதி மாதத்தை காணச் செய்த தேவனுக்கு நன்றி செலுத்தி தேவனுடைய வார்த்தை நமக்கு என்ன போதிக்கிறது என்று காண்போம். நமதாண்டவரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து தம் சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்த சபைக்கு நாம் பல வழிகளில் செய்யும் உதவிகள் என்னவென்று பார்ப்போம்.

உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணும்படி (மத். 28:18-20) சொன்ன கட்டளையில் நம்முடைய பங்கு எப்படியிருக்கிறது?

**கிறிஸ்து இயேசுவைப் பற்றி எடுத்துக்கூறும்படியான சந்தர்ப்பங்களை ஆவலோடு எதிர்நோக்கி இருக்க வேண்டும்.**

1. நான் ஏன் கிறிஸ்தவளாக மாறினேன் என்று நம்முடைய குடும்பத்தாருக்கு கூற வேண்டும்.

**யோவான் சொன்னதைக் கேட்டு அவருக்குப் பின் சென்ற இரண்டு பேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான். மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம் (யோவா 1:40,41).**

2. தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதற்கு மக்களை நம்முடைய வீட்டிற்கு அழைக்க வேண்டும்.

**தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்** (அப். 5:42).

3. ஆராதனையிலும், வேதாகம வகுப்புகளிலேயும் பங்கு கொள்ள மக்களை அழைக்க வேண்டும் (அப். 5:42).

4. நம்முடைய பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் தேவனைப் பற்றியும், அவருடைய விலையேறப் பெற்ற குமாரனைப் பற்றியும் கற்று கொடுக்க வேண்டும். **அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்** (2 தீமோத்தேயு 1:5).

## II நம்முடைய சொந்த வாழ்க்கையின் மூலம் கிறிஸ்துவை பிறருக்கு காட்டும்படியான சந்தர்ப்பங்களை எதிர்நோக்கி இருக்க வேண்டும்.

"**இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது**" (மத். 5:16).

நாம் என்ன செய்ய வேண்டுமென்று பணிக்கப்பட்டிருக்கிறோமோ அதை முதலில் நம் வாழ்க்கையில் செயல்படுத்திக் காட்ட வேண்டும். நாம் எதை போதிக்கிறோம் என்பதை மற்றவர்கள் நாம் வாழும் வாழ்க்கையின் மூலம் காண வேண்டும். நான் ஒரு கிறிஸ்தவளாக இருந்து கொண்டு அடுத்தவர்களைப் பற்றி புறங்கூறித்திரிந்தால் என் வார்த்தையை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? என் அயலகத்தாரிடம் சண்டை பண்ணுகிறவளாய் இருந்தால் என் பிரசங்கத்தை ஏற்றுக் கொள்வார்களா? நான் எதற்கெடுத்தாலும் பொய் சொல்லுகிறவளாய் இருந்தால், என் பேச்சை பிறர் மதிப்பார்களா?வேதம் இப்படி கூறுகிறது, "**அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்**" (யாக். 1:22).

தருணம் கிடைக்கும் பொழுதெல்லாம் நம் ஐக்கியத்தை சபையில் காட்ட வேண்டும். ஒருவருக்காக ஒருவர் சாகவும் விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அதாவது, நம்முடைய சக கிறிஸ்தவர்களை, நம்மை விட அதிகமாக நேசிக்க வேண்டும். கிறிஸ்துவின் சபையின் மேன்மைக்காக நாம் என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்ய வேண்டும். நல்ல காரியங்களை செய்ய ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்த வேண்டும். ஆராதனைக்கு வராமல் இருப்பவர்களைப் போய் சந்தித்துப் பேச வேண்டும். கஷ்டமான சூழ்நிலையில் இருப்பவர்களைப் பார்த்து அவர்களை ஆறுதல்படுத்தி உற்சாகமடையச் செய்ய வேண்டும். யாராவது தங்களுடைய வாழ்க்கையில் பாவத்தை அனுமதித்து, செய்து கொண்டிருப்பார்களானால் அன்பாக கடிந்து கொள்ள வேண்டும். சபை விசுவாசிகளைப் பார்க்கும் போது முக மலர்ச்சியுடன் அவர்களிடம் பேச வேண்டும். சமயங் கிடைக்கும் போதெல்லாம் பிறருக்கு உதவி செய்ய வேண்டும். நம்மால் முடியாத கடினமானது என்று ஒன்றுமில்லை. தியாக மனப்பான்மை இருக்குமானால் எல்லாமே சுலபமாகத்தான் இருக்கும். **ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்** (கலா. 6:10). பசியாயிருப்பவர்களுக்கு ஆகாரம் கொடுக்கச் சொல்கிறார். ஏழையாய் இருப்பவர்களுக்கு துணி கொடுக்கச் சொல்கிறார். வியாதியில் உதவி, பிரச்சனையில் இருப்பவர்களுக்கு உடனே உதவி போன்றவைகளை நாம் செய்யும்படி தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

மேலும் சத்தியத்தைப் பேசவும், மற்றவர்களை மரியாதையுடன் நடத்தவும், எந்த வகை வேலையாயினும் மிகச் சிறப்பாக செய்தல் போன்றவைகளை தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

நான் இவ்வளவு கொடுக்கிறேனே, எனக்கு அவர்கள் என்ன செய்கிறார்கள், நான் இவ்வளவு விட்டுக் கொடுக்கிறேன், அவர்கள் எனக்கு எதை தியாகம் செய்கிறார்கள், அவர்கள் எனக்கு உதவி செய்யாதபோது நான் மட்டும் ஏன் செய்ய வேண்டும் என்று நினைக்கக்கூடாது. எல்லோருக்கும் நன்மை செய்யலாம். தேவன் நம்மை கவனித்துக் கொள்வார். நாம் செய்கிற வர்களை அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் எனக்கு திருப்பி பதில் செய்வார் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும்.

**கர்த்தருடைய காரியத்தில் நாம் பங்கு கொள்ளாதபோது,** "தேவன் எனக்கு முக்கியமில்லை", "கிறிஸ்து செய்த தியாகம் வீண்", "தேவனை விட நான் முக்கியம்", "தேவனை விட மற்றவர்கள் முக்கியம்", "தேவன் மீது என் அன்பு இருக்க வேண்டிய அளவு இல்லை", "என் கிறிஸ்தவன் உண்மையான தல்ல" என்பதை பிறருக்கு கூறுகிறோம்.

வேதாகமம் சொல்லக்கூடிய வார்த்தைகளை (சத்தியத்தை) வைத்துக் கொண்டிருக்கிறோம். ஒரே மெய்யான, ஜீவனுள்ள தேவனை ஆராதித்துக் கொண்டிருக்கிறோம். நாம் பரிசுத்தமாக தேவனுக்கு முன் நிற்க கிறிஸ்து எல்லா தியாகத்தையும் செலுத்தினார். நாம் மரண பரியந்தம் உண்மையுள்ள வர்களாய் இருந்தால் பரலோகத்தில் நமக்கு வீடு உண்டு. தேவனோடு கூட நித்தியமாய் இருப்போம்.

நாம் பிறருக்கு கிறிஸ்துவின் வசனத்தைக் கூறி ஆத்தும ஆதாயம் செய்ய மனமில்லாதிருந்தால், தேவனுடைய நாமம் மகிமைக்காக நம்மை அர்ப்பணிக்காமல் இருந்தால், கிறிஸ்தவளாக இருப்பதினால் ஒரு மகிழ்ச்சியுமில்லாமல், பரலோகத்தைப் பெற்றுக் கொள்ள ஓர் இலக்கு இல்லாமல் இருந்தால், தருணம் கிடைக்கும்போதெல்லாம் அவரைத் தொழுது கொள்ள மனமில்லாமிருந்தால், தேவன் நமக்குக் கொடுத்தவைகளில் திரும்ப அவருக்கு கொடுப்பதில் கடின மனதோடிருந்தால், அன்பான சகோதரிகளே, தேவனும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் நமக்காக பண்ணின தியாகங்கள் நம்முடைய வாழ்க்கையில் வீணாகப் போய் விடும். பரலோகத்தை சுதந்தரிக்கும் தகுதியை இழந்து விடுவோம்.

ஆக, கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, வேதாகமம் நமக்கு கூறும் ஆலோசனையை ஏற்று வாழ்வோம். நாம் சார்ந்திருக்கும் சபைக்கு உறுதுணையாய் இருப்போம். நாம் பிள்ளைகளுக்கும், மற்றவர்களுக்கும் சாட்சியாக ஜீவிப்போம். அப்படிச் செய்ய தேவன் உதவி செய்வார்.

நம்முடைய சுய விருப்பத்தை சிலுவையில் அறைந்து விட்டு முற்றிலும் தேவ சித்தத்துக்கு ஒப்புக்கொடுப்போம். ஆமென்.

**அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள். வரும் புதிய ஆண்டில் குடும்பத்திற்கும், சபைக்கும் பக்கபலமாக இருக்க நாம் தீர்மானிப்போம்.**

**ரேச்சல் ராஜநாயகம்**

வாலிபர் பகுதி

# காலேப் வேறே ஆவியை உடையவன்

சபைக்காக தன் ஜீவனை ஈந்த கிறிஸ்து இயேசுவின் நாமத்தினாலே வாலிபர்களாகிய உங்களை வாழ்த்துகிறேன். நம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் உலக தோற்ற முதற்கொண்டு தேவன் தம்முடைய சித்தத்தை யார் செய்கிறார்களோ அவர்களை தெரிந்து கொண்டு அவர்களுக்கு வேண்டிய வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களையும் கொடுத்திருப் பதை நாம் அநேக வேளைகளில் வாசித்து இருக்க முடியும்.

அப்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவனை அநேக வேளை களில் அவர் அவர்களை "என் தாசன்" என்று பெருமையாக அழைத்திருக் கிறார் அப்படி வேதாகமங்களில் அழைக்கப்பட்டவர்களை நாம் விரல் விட்டு எண்ணி விடலாம். அந்த ஒரு சிலரில் ஒருவனைக் குறித்து தான் இன்றைக்கு நாம் கற்றுக் கொள்ளப்போகிறோம். அவன் வேறு யாருமல்ல நமக்கு மிகவும் பரிச்சயமான "காலேப்" தான். இவனைக் குறித்து தேவன் "என் தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவன்" (எண் 14:24) என்று கூறி இவனைக் குறித்தும் சாட்சியும் கொடுத்தார். இதைக் குறித்து நாம் ஆராய்ச்சி செய்து கற்றுக் கொள்வோம்.

எகிப்திலிருந்து மோசேயின் தலைமையில் விடுதலையாகி புறப்பட்டுப் போன திரளான இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடலை கடந்து, பல இன்னல்களுக்கு மத்தியில் பாரான் வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள் (எண். 12:16) இந்த வனாந்தரத்திலிருந்து மோசே தேவனுடைய கட்டளை யின்படி பன்னிரெண்டு வேவுகாரர்களை கானான் தேசத்திற்கு வேவு பார்க்க அனுப்பி வைத்தான். அதில் இரண்டு பேர் காலேப், யோசுவா (எண் 13:6,8) என்பவர்கள், இந்த பன்னிரெண்டு பேரும் சேர்ந்து கானானனை வேவு பார்த்து விட்டு சுமார் 40 நாட்களுக்கு பின்பு கானான் தேசத்தின் கனிகளை அறுத்து கொண்டு, தங்கள் பாளயத்திற்கு திரும்பி வந்தார்கள் (எண 13:25,26). அப்படி வந்தவர்களில் காலேப், யோசுவாவும் தவிர மற்ற பத்து பேர்கள் கானான் தேசத்தின் ஜனங்களை குறித்து துர்ச் செய்தி பரப்ப, ஜனங்கள் அதைக் கேட்டு கைகால் நடுக்கம் பிடித்தவர்களாக தேவனை விசுவாசிக்காமல் ஒரு தலைவனை ஏற்படுத்தி கொண்டு எகிப்துகே திரும்பி போய் விடுவோம் என்று தங்கள் இருதயங்களில் எகிப்துக்கு திரும்பினார்கள் (எண் 14:4).

இதனால் கோபம் அடைந்த தேவன் "அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தை காணமாட்டார்கள் எனக்கு கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள்" (எண் 14:23) என்றார். ஆனால், காலேப்பை குறித்து தேவன் என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும் உத்தமமாய் என்னைப் பின்பற்றின படியினாலும் அவன் போய் வந்த தேசத்திலே

அவனைச் சேரப் பண்ணுவேன் (எண் 14:24) என்று வாக்குரைத்தார். ஏனென்றால், "காலேப் வேறே ஆவியை உடையவன்" என்று தேவனே சாட்சி கொடுத்தார், அது என்னவென்று இக்கட்டுரையின் மூலம் கற்றுக்கொள்வோம்.

## I. காலேப் விசுவாசமென்னும் ஆவியை உடையவன் :-

கானானுக்குள் போய் வந்த வேவுக்காரர்கள் பத்து பேரும் நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது, அவர்கள் நம்மைப் பார்க்கிலும் பலவான்கள் நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளை பட்சிக்கிற தேசம் நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள், அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம், நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப் போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கு அப்படியே இருந்தோம் (எண். 13:31-33) என்று பீதியோடு சொல்ல, அப்பொழுது காலேப் நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக் கொள்வோம், நாம் அதை எளிதாக ஜெயித்துக் கொள்ளலாம் (எண் 13:30) என்று விசுவாசத்தோடு கூறினான்.

வாலிபர்களே காலேப்பின் வார்த்தையை பாருங்கள், எவ்வளவு விசுவாசம் பாருங்கள் "உடனே ஜெயித்து கொள்ளலாம்" என்றான், வேவு பார்க்க போன பத்து பேரும் தேசத்தையும் ஜனங்களையும் பார்த்தார்கள் ஆனால் காலேப், தேசத்தையும் தன் தேவனையும் மாத்திரமே பார்த்தான், அதனால் தான் அவனுக்கு தேவன் மீது இவ்வளவு அளவு கடந்த விசுவாசத்தை வைக்க முடிந்தது. வாலிபர்களே உங்களுடைய வாழ்க்கையில் பிரச்சனைகளும், போராட்டங்களும் வரும்போது நீங்கள் உங்களைச் சுற்றி பார்க்காமல், உங்கள் தேவனை மாத்திரமே பாருங்கள், அப்பொழுது தான் விசுவாசத்தில் நீங்கள் வளர்ந்து "அவருடைய தாசனாக" மாற முடியும். இந்த காலேப் விசுவாசத்தில் வேறே ஆவியையுடையவனாக இருந்தான்.

## II. காலேப் பொறுமை என்னும் ஆவியை உடையவன்

இஸ்ரவேல் ஜனங்களுடைய அவிசுவாசத்தினாலே கோபம் அடைந்த தேவன் உங்கள் பிரேதங்களே இந்த வனாந்தரத்திலே விழும், அவைகள் வனாந்தரத்திலே விழுந்து தீரு மட்டும் உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து நீங்கள் சோரம் போன பாதகத்தைச் சுமப்பார்கள். நீங்கள் தேசத்தைச் சுற்றிப் பார்த்த நாற்பது நாள் இலக்கத்தின் படியே ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களை சுமந்து என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள் (எண். 14:32:34) என்றார்.

அருமையான வாலிப உள்ளங்களே, இதை கவனியுங்கள். காலேப்புக்கு கானானுக்குள் பிரவேசிக்கும் விசுவாசம் இருந்தது, ஆனாலும், ஜனங்களின் அவிசுவாசத்தினாலே அவர்களோடே சேர்ந்து தானும் அந்த தண்டனைக்கு உட்பட்டு வனாந்தரத்திலே அலைந்து திரிந்தான். ஒரு வருடம் இரண்டு வருடம் அல்ல நாற்பது வருடங்கள் அலைந்தான். எப்படியாவது தேவன் அந்த தேசத்தை நமக்கு தருவார் என்ற விசவாசத்தோடு நீடிய பொறுமையோடே காத்திருந்தான்.

ஆனால், இன்று வாலிபர்களாகிய நமக்கு பொறுமை என்பதே இல்லாமல் போய்விட்டது, எதற்கெடுத்தாலும் நாம் அவசரப்படுகிறோம். தேவனிடத்தில் ஜெபித்து உடனே பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறோம். பதில் வராத பட்சத்தில் தேவனிடத்தில் கோபப்படுகிறோம். இது தவறான சிந்தனையாகும் நாம் பொறுமையோடே காத்திருந்து பெற்றுக் கொள்ள வேண்டும், காலேப் பொறுமையில் வேறே ஆவியை உடையவனாக இருந்தான்.

## III. காலேப் தைரியம் என்னும் ஆவியை உடையவன்

யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேலர்கள் யோர்தானை கடந்து வெற்றிகரமாக பல யுத்தங்களை செய்து தேசத்தை பங்கிட்டபோது காலேப் யோசுவாவை நோக்கி ஏனாக்கியரின் மலை நாட்டை எனக்குத் தாரும் (யோசு 14:12) என்று கேட்டான். இந்த ஏனாக்கியரை குறித்து தான் மோசேயின் கீழ் இருந்த ஜனங்கள் நடுக்கத்தோடு சொல்லி புலம்பினார்கள் (எண் 13:35) அந்த ஏனாக்கியரின் மலை நாட்டைதான் காலேப் யோசுவாவிடம் கேட்டான். அப்படி கேட்ட போது காலேபுக்கு வயது என்ன தெரியுமா? 85, இந்த வயதில் கர்த்தர் சொன்னபடி "அவர்களைத் துரத்தி விடுவேன்" (யோசு 14:12) என்று தைரியமாகச் சொன்னான்.

அவனுடைய வாழ்க்கையில் எத்தனையோ ஏமாற்றங்களும், பிரச்சனைகளும் ஏற்பட்டாலும் அதைக்கண்டு மனம் சோர்ந்து போகாத படிக்கு தைரியமாய் வாழ்ந்தான். எனக்கு வயதாகி விட்டதே, ஏதாவது பிரச்சனையில்லாத இடம் தனக்கு சுதந்திரமாக கிடைத்தால் போதும் என்று நினைக்காமல், ஏனாக்கியரின் மலை நாட்டை கேட்டு பெற்று ஏனாக்கியரை துரத்தி அடித்து அதை சுதந்திரமாக்கிக் கொண்டான். காலேப் தைரியத்தில் வேறே ஆவியை உடையவனாக இருந்தான்.

வாலிபர்களே, நம்முடைய தைரியம் எப்படி இருக்கிறது. சபையின் முன்பதாக ஜெபத்திற்கோ, வேத வாசிப்புக்கோ ஊழியர் அழைக்கும் போது தைரியம் இழந்தவர்களாய் சர்வ நாடியும் ஒடுங்கி போய் நிற்கிறோம். நாம் இனிமேலாவது கர்த்தர் எனக்குள் இருக்கிறார் என்ற தைரியத்தோடு தோல்விகளை கண்டு துவளாமல் கர்த்தருக்காக வாழ்ந்து சாதிப்போம், பரம கானானனை சுதந்திரமாக பெற்றுக் கொள்வோம்.

**N. பர்னபாஸ்,** திருப்பூர்.

### எப்பிக்கூரர் (அப். 17:18)

- தேவன் உலகத்தை சிருஷ்டித்தார் என்பதை மறுக்கிறவர்கள்.
- தேவனுடைய பராமரிப்பை மறுக்கிறவர்கள்.
- ஆத்துமா மரணத்தின்போது அழிக்கப்படும் என்று எண்ணுகிறவர்கள்.
- புசித்துக் குடித்து மகிழ்ச்சியாய் இருப்பதை நோக்கமாகக் கொண்டவர்கள்.

சிறுவர் பகுதி

# தவறு செய்ய மறுத்த வாலிபன்



என் அன்பு சிறார்களே உங்களை இந்த மாதம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். நமதாண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். மாதந்தோறும் இடம் பெறும் பகுதிகள் உங்களுக்கு பயனுள்ளதாய் இருக்கும் என நம்புகிறேன். இம்மாதம் ஒரு சிறந்த கதையை உங்களுக்கு சொல்கிறேன். என்னோடு கூட வாருங்கள்.

தேவனுக்குப் பிரியமாக நாம் எப்படி வாழ வேண்டும் என்பது பற்றியும், தேவனை நாம் புரிந்து கொள்ளவும் அநேக வேதாகம கதைகள் நமக்கு உதவியாயிருக்கின்றன. அதிலிருந்து ஒரு கதையை இந்த மாதம் நான் உங்களுக்குக் கற்றுத்தருகிறேன். அந்தக் கதை யாரைப்பற்றி தெரியுமா? தேவனுக்கு விரோதமாக **தவறு செய்ய மறுத்த** ஒருவரை பற்றி நாம் பார்க்கப் போகிறோம். வாசியுங்கள் (தானி. 6:1-28) சரி, உள்ளே செல்லுவோமோ?

தரியு என்னும் பேர் கொண்ட ராஜா ஒருவன் இருந்தான். அவனுக்கு சில பிரதானிகளும், மந்திரிகளும் இருந்தார்கள். அந்த பிரதானிகள் ராஜாவினிடத்தில் ஒரு கோரிக்கை வைத்தார்கள். அது, தேசத்தில் ராஜாவைத் தவிர யாரிடத்திலும் ஜெபிக்கக் கூடாது என்றும், அப்படி ஜெபிப்பவர்கள் சிங்கங்களின் கெபியில் போடப்பட வேண்டும் என்றும் கூறினார்கள். ராஜாவும் அதன்படி, ஒரு மாதம் முழுவதும் யாரும் ஜெபிக்கக்கூடாது என ராஜா சட்டம் விதித்தார்.

ராஜாவிற்கு பிரியமான, உண்மையான பிரதானியாக ஒருவன் இருந்தான். அவன் பெயர் தானியேல். அவன் தேவனுக்குப் பிரியமும் உண்மையுமாய் நடக்கிறவன். ராஜாவினிடத்தில் ஜெபிப்பது தவறு என்பதை உணர்ந்தான். எனவே, அவன் ராஜாவின் கட்டளையை பொருட்படுத்தாமல் தேவனை நோக்கி தொடர்ந்து ஜெபம் செய்தான். அவன் மூன்று வேளையும் ஜெபம் செய்தான்.

ஆனால், மற்ற பிரதானிகளோ தானியேலுக்கு எதிராக, ராஜாவினிடத்தில் போய் தானியேலை போட்டுக் கொடுத்தார் கள். அதைக் கேட்டதும் ராஜா மிகவும் சோர்ந்து போனார். ஏனென்றால், தானியேல்

ராஜாவுக்குப் பிரியமானவன். ஆனால், சட்டம் தானியேலை சிங்க கெபியில் போடப்பட வேண்டும் என இருந்தது. அதன்படியே, தானியேல் சிங்க கெபியில் போடப்பட்டான்.

அந்த நாளின் இரவு நேரத்தில் தரியு ராஜாவிற்கு தூக்கமே இல்லை. அவர் சோர்ந்து போனார். ஏன் தெரியுமா? நான் முன்னே சொன்னது போல் தானியேல் ராஜாவுக்கு மிகவும் பிரியமானவன். அடுத்த நாள் அதிகாலையிலே ராஜா சிங்க கெபியினிடத்திற்கு வந்து அவன் உயிரோடிருக்கிறானா என தெரிந்து கொள்ள தானியேலை கூப்பிட்டார்.

தானியேல் பதிலாக ராஜாவே சிங்கங்கள் என்னை சேதப்படுத்தாதபடிக்கு **தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயைக் கட்டிப் போட்டார்** (தனி. 6:22) என கூறினான். அதைக் கேட்டதும் ராஜாவுக்கு ஒரே மகிழ்ச்சி. ராஜா தன் வேலை ஆட்களை கூப்பிட்டு தானியேலை கெபியிலிருந்து தூக்கி விடச் சொன்னான்.

தானியேலுக்கு எதிராக எண்ணங்கொண்ட தீய பிரதானிகளின் மீது ராஜா கோபம் கொண்டார். எனவே அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் கெபியில் போட்டார். அந்த சிங்கங்கள் அவர்களை கொன்று போட்டன.

இந்த தானியேல் நம் எல்லோருக்கும் ஒரு சிறந்த உதாரணமாவார். அவன் தவறு செய்ய நினைக்காமல் தேவனிடத்தில் ஜெபம் செய்தான். எனவே தேவன் தானியேலை காப்பாற்றினார். சிங்கங்களின் வாயில் இருந்து அவனைத் தப்புவித்தார்.

இதிலிருந்து நாம் கற்க வேண்டிய பாடம், மற்றவர்கள் நம்மை தீங்கு செய்ய சொன்னாலும், நாம் தீமையை செய்யாமல் எப்பொழுதுமே நன்மையையே செய்ய வேண்டும். எதிர் வரும் புதிய ஆண்டில் எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். அப்போது எந்தத் தீமையும், சூழ்ச்சியும் நம்மை ஒன்றும் செய்யாது.

**"உங்களுக்கு எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்"**

**ஏபில் ரோஜர் நாயகம்**

## ஸ்தோயிக்கர் (அப். 17:18)

- பிரபஞ்சம் (பூமி) தான் தேவன் என்று எண்ணுகிறவர்கள்.
- ஆத்துமா மரிக்கிறது என்றும் நற்பண்புகளுக்கு பிரதிபலன் உண்டு என்றும் எண்ணுகிறவர்கள்.
- தன்னைத்தானே வெறுப்பதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள்.

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கடந்த மாதம் தேவன் புதிய ஏற்பாட்டில் விவரித்திருக்கிற ஒன்றான மெய் சபையில் அங்கத்தினராக இருப்பதன் முக்கியத்துவத்தையும், அந்த ஒன்றான மெய் சபையை அடையாளம் கண்டுகொள்வதன் முக்கியத்துவம் பற்றி சில வசனங்களைப் படித்தோம். அதில் தேவன் காரியங்களை தெளிவு படுத்தியிருக்கிறார். அந்த வசனங்களில் கீழ்க்காணும் உண்மைகளிலிருந்து கிறிஸ்துவின் சபையின் நித்திய முக்கியத்துவத்தையும், மதிப்பையும் நாம் கற்றுக்கொண்டோம். இயேசு அந்த சபையை, ஆத்துமாவை சுத்திகரிக்கும் சொந்த இரத்தத்தினாலே வாங்கினார்; கிறிஸ்து அந்த சபையில் அன்பு கூர்ந்து அதற்காக தம்மையே ஒப்புக்கொடுத்தார்; தங்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அந்த ஒன்றான மெய் சபையில் சேர்க்கிறார்; அந்த சபையை தேவன் உலகத்திலிருக்கிற எல்லாவற்றைக் காட்டிலும், விலையேறப்பெற்றப் பொக்கிஷமாக விவரித்திருக்கிறார். அதை அதிக மதிப்புள்ள ஒன்றான தம்முடைய வசனங்களிலே விவரித்திருக்கிறார். அந்த சபையானது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது. அவரே அந்த சபைக்கு தலையாயிருக்கிறார் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அதில் அங்கமாயிருக்கிறோம்; கிறிஸ்துவின் சபையாகிய அந்த ஒரே ஆவிக்குரிய சரீரத்தில் தான் தேவன் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் வைத்திருக்கிறார்.

கிறிஸ்துவின் சபையின் அழகிற்காகவும், சிறப்பிற்காகவும் நாம் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும், அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். ஆனால் இந்த நித்தியமான பாடத்தில் தேவன் இதை மட்டும் சொல்லவில்லை. தயவு செய்து ஜெப சிந்தையுடன், மிக ஜாக்கிரதையாக கீழ்க்காணும் வசனங்களில் தேவன் என்ன சொல்கிறார் என்பதை கவனியுங்கள்.

எபேசியர் 2:14-16 வசனங்களை நாம் வாசிக்கும்போது, இந்த அழகான வசனங்களில் தேவன் தம்முடைய நேச குமாரனாகிய இயேசுவை தம்முடைய சமாதானமாக விவரித்திருக்கிறார்! அதாவது இயேசு சிலுவையின் மேல் தன்னுடைய தியாக மரணத்தினால் தேவனுக்கும், மனிதனுக்கும் இடையில் சமாதானத்தை சாத்தியமாக்கியிருக்கிறார். இயேசு இருதரப்பினரையும் ஒன்றாக்கினார். 11-13 வசனங்களின்படி இருதரப்பினர் அல்லது இருதிறத்தாரையும் என்பது, யூதர்களையும், புறஜாதிகளையும் குறிக்கும். ஆகவே, இயேசு சிலுவையில் தன்னுடைய மரணத்தின் மூலமாக யூதர்களும், புறஜாதியினரும் ஒன்றாகும்படி செய்தார். நாம் ஒரு நிமிடத்தில் அந்த ஒற்றுமை எங்கே நடந்தது என்று பார்ப்போம்.

இப்போது பிரியமானவர்களே, இந்த முக்கியமான கருத்தைக் கவனியுங்கள். சிலுவையில் தன்னுடைய மரணத்தினால் யூதர்களும், புறஜாதிகளும் தேவனோடு **ஒப்புரவாகும்படிச் செய்தார்.** நாம் நம்முடைய முந்தைய

பாடங்களில் படித்தபடி நம்முடைய பாவங்கள் நம்மை தேவனிடத்திலிருந்து பிரித்து விடுகிறது (ஏசாயா 59:1,2). எனவே, நாம் தேவனிடத்தில் தீவிரமாக ஒப்புரவாகி விடவேண்டும்.

இயேசு சிலுவையின் அந்த கோரமான, சாபமான மரணத்தை ருசிபார்த்ததினால் அந்த ஒப்புரவாகுதலை சாத்தியமாக்கினார்! அதாவது, இயேசு தம்முடைய இரத்தத்தை அந்த சிலுவையிலே வழிந்தோட அனுமதித்ததினால் நம்முடைய ஆத்துமாவிலிருந்து நம்முடைய பாவங்கள் கழுவி சுத்திகரிக்கப்பட இயேசு தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே சாத்தியமாக்கினார். நாம் இயேசுவின் கட்டளைகளுக்கு நம்முடைய உண்மையான அன்புள்ள கீழ்ப்படிதலை வெளிப்படுத்துவோமெனில், நம்முடைய பாவங்கள் எல்லாம் அவருடைய திருஇரத்தத்தினாலே கழுவப்படுகிறது. நாமும் தேவனிடத்திலிருந்து ஒருபோதும் பிரிந்து போக மாட்டோம், அவரோடு நாம் ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம். இது ஒரு அற்புதமான ஆறுதல் அளிக்கக்கூடிய, மெய் சிலிர்க்கக்கூடிய எண்ணம் இல்லையா!

ஆனால், இந்த வசனங்களின்படி அந்த ஒப்புரவாகுதல் **எங்கே** நடைபெறுகிறது? ஆம், இது **ஒரே சரீரத்தில்** நடைபெறுகிறது. நாம் கற்றுக் கொண்டிருக்கிறபடி அந்த ஒரே சரீரம் சபைதான். எனவே, இயேசு தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே சம்பாதித்த ஒரே சபையாகிய ஒரே சரீரத்தில் தான் ஒருவன் தேவனோடு ஒப்புரவாக முடியும். அங்கேதான் கீழ்ப்படிதலுள்ள யூதர்களும், புறஜாதிகளும் முதல் நூற்றாண்டில் ஒன்றாக்கப் பட்டார்கள். இங்கேதான் இன்னும் கீழ்ப்படிதலுள்ள மக்கள் ஒன்றாக்கப்படு கின்றனர்.

நிச்சயமாகவே, கிறிஸ்துவின் சபையையும், அதில் அங்கத்தினராக இருப்பதன் நித்திய முக்கியத்துவத்தையும் நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள். ஏனென்றால், நீங்களும், நானும் தேவனிடத்தில் ஒப்புரவாகிறதற்கு அந்த ஒரே வழிதான் இருக்கிறது!.

எபேசியர் 3:21யை வாசியுங்கள். நாம் தேவனுக்கு மகிமை செலுத்த வேண்டும் என்று தேவன் சொல்கிறார்? கிறிஸ்துவின் ஒன்றான மெய் சபையில் நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அப்படியென்றால், மனிதர்கள் பல நூற்றாண்டுகளாக தொடங்கியிருக்கிற நூற்றுக்கணக்கான சபைகளில் தேவனுக்கு மகிமை செலுத்துவது சாத்தியமாகாது! தேவன் படைத்த ஒரே ஒரு ஆவிக்குரிய சரீரம் தான் இருக்கிறது. அதில் நாம் அவருக்கு மகிமை செலுத்த வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். அந்த ஆவிக்குரிய சரீரம் கிறிஸ்துவின் சபைதான்.

எபேசியர் 4:4ஐ வாசியுங்கள். எப்படி ஒரே ஆவியும், ஒரே நம்பிக்கையும் உண்டோ, அப்படியே, தேவன் ஏற்படுத்தியிருக்கிற ஒரே ஆவிக்குரிய சரீரமாகிய ஒரே சபையும் உண்டு. தேவனுடைய மாதிரியாகிய புதிய ஏற்பாட்டில் அடையாளம் காணப்படுகிற அந்த சபையைப் பற்றிதான் நாம் படித்துக்கொண்டிருக்கிறோம்.

தேவன் சர்வஞானி என்பதை நாம் அறிவோம். சுமார் கி.பி. 62ல் இந்த வார்த்தைகளை எழுத தேவன் பவுலை ஏவினபோது, மனிதர்கள் நூற்றுக்கணக்கான வித்தியாசமான சபைகளை உண்டாக்கி வித்தியாசமான காரியங்களை போதிப்பார்கள். தாங்களும் இயேசுவை தான் பின்பற்று கிறோம் என்று சொல்வார்கள் என்பதை தேவன் அறிந்திருந்தார். அப்படி யென்றால் ஒரே சரீரமாகிய ஒரே சபைதான் உண்டு என்று தேவன் சொல்வதன் பொருள் என்ன?

**முதலாவது,** தேவன் இந்த வார்த்தைகளை தேவ தாசர்களை ஏவி எழுதிய போது ஒரே சபைதான் இருந்தது! நாம் ஏற்கனவே பார்த்தபடி தேவன் அந்த ஒரே சபையை கிறிஸ்துவின் சபையாக விவரித்திருக்கிறார் (ரோமர் 16:16) தேவனுடைய சபை (1கொரிந்தியர் 1:2), கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் (எபேசியர் 1:22,23). அந்நாட்களிலே மனிதர்கள் நூற்றுக்கணக்கான வித்தியாசமான மார்க்கப்பிரிவினைக் கூட்டங்களை உண்டாக்கவில்லை என்பது வரலாற்று உண்மையாகும்.

**இரண்டாவது,** எபேசியர் 4:4ல் தேவனால் சொல்லப்பட்டிருக்கிற வைகள் தேவன் அங்கீகரிக்கக்கூடிய சபை ஒன்று தான் என்பதை நிரூபிக்கிறது. அது கிறிஸ்துவின் சபை. அப்படியென்றால் நிச்சயமாகவே, பல நூற்றாண்டுகளால் மனிதனால் உண்டாக்கப்பட்டிருக்கிற சபைகள் எல்லாம் தேவனால் அங்கீகரிக்கப்படாது.

அப்படிப்பட்ட சபைகளுள் ஒன்றில் நீங்கள் அங்கத்தினராயிருந்தால் எங்களுடைய ஊக்கமான நம்பிக்கையும், ஜெபமும், அன்பான வேண்டு கோளும் என்னவென்றால், அந்த சபையை விட்டுவிட்டு உங்கள் கடந்த கால பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பது உட்பட கர்த்தருக்கு கீழ்ப்படிய வேண்டும். அதை நீங்கள் செய்யும் போது தேவன் உங்களை கிறிஸ்துவின் சபையில் சேர்த்துக்கொள்வார். அங்கேதான் உங்கள் ஜீவிய நாட்கள் முழுவதும் நீங்கள் அவரை ஆராதிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

எபேசியர் 5:23யை நாம் வாசிக்கும்போது, மறுபடியும் கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறார் என்று ஒருமையில் பார்க்கிறோம். ஆனால், இந்த வசனத்தில் தேவன் உங்களுக்கும், எனக்கும் வேறு எதை வெளிப்படுத்தியிருக்கிறார்? ஆம், தான் ஸ்தாபித்த அந்த ஒன்றான மெய் சபையாகிய சரீரத்திற்கு கிறிஸ்து **இரட்சகராயிருக்கிறார்**. எனவே, நம்முடைய அருமை ஆண்டவர் மனிதர்கள் உருவாக்கின சபைகளுக்கு இரட்சகர் அல்ல. எனவே, நீங்களும் நானும் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப் படவேண்டுமென்றால் கிறிஸ்து தலையாயிருக்கிற அவருடைய சபையிலே நாம் உண்மையுள்ள கீழ்ப்படிதலுள்ள உறுப்பினராக இருக்க வேண்டும்.

எபேசியர் 6:10-18 வசனங்களை நாம் வாசிக்கும்போது தேவன் கிறிஸ்துவின் சபையை தம்முடைய ஆவிக்குரிய சேனையாக விவரிக்கிறார். பிரியமானவர்களே, இந்த உண்மையை மிக ஜாக்கிரதையாக கவனியுங்கள் தேவன் தம்முடைய சபையானது சரீரப்பிரகாரமான யுத்தத்தில் ஈடுபட வேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை. மாறாக, இது பிசாசுக்கும், அவனுடைய துன்மார்க்கமான சேனைக்கும் எதிரான ஆவிக்குரிய போராட்டமாகும். நாம்

மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல, நம்முடைய போராயுதங்கள் மாம்சத்திற்கேற்றவைகளுமல்ல என்று தேவன் (2கொரிந்தியர் 10:3-5) வசனங்களில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஆயினும், தேவன் நமக்குத்தந்திருக்கிற ஆயுதங்கள் பலமானவை களை கீழே இழுத்துப்போடுவதற்கும், வாக்குவாதங்களையும், தேவனுடைய ஞானத்திற்கு எதிராக உயர்த்தும் ஒவ்வொரு மேட்டிமையான காரியங்களை அமிழ்த்துவதற்கும் தேவனுக்குள் வல்லமையுள்ளதாயிருக்கிறது. நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொண்டால் நாம் கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படலாம். இது பிசாசுக்கும் அவனை பின்பற்றுபவர்களுக்கும் எதிராக எதிர்த்து நிற்க, அவர்களை முறியடிக்க உதவி செய்யும்.

தேவனுடைய ஆவிக்குரிய சர்வாயுத வர்க்கம் சத்தியம், நீதி, சமாதானத்தின் சுவிசேஷம், விசுவாசமென்னும் கேடகம், இரட்சணிய மென்னும் தலைச்சீரா, வேத வசனமாகிய ஆவியின் பட்டயம், ஜெபம் என்னும் விலையேறப் பெற்ற சிலாக்கியம் ஆகியவைகளை உள்ளடக்கியது.

எனவே, இந்த வசனங்களில் கிறிஸ்துவின் சபையின் முக்கியத்து வத்தையும், மதிப்பையும் நாம் காணமுடியும். அதோடு தேவன் சபையானது "ஆவிக்குரிய போராட்டங்களை தேவனுடைய வல்லமையான ஆவிக்குரிய ஆயுதங்களைக் கொண்டு போர் செய்ய வேண்டும்" என்று கட்டளையிடு கிறார். கிறிஸ்துவின் சபையில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தின் ஒவ்வொரு பாகங்களையும் எடுத்து பயன்படுத்தி, தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தை கொண்டு மக்களின் இருதயங் களை உருவக்குத்தி அவர்களுக்காக ஊக்கமாக ஜெபம் பண்ணி கிறிஸ்துவின் சபைக்கு ஆவிக்குரிய பலத்தை அளிக்க வேண்டும்.

1 தெசலோனிக்கேயர் 4:16,17 வசனங்களை வாசிக்கும்போது இந்த வசனங்களில் தேவன் தெளிவாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இறுதி வருகையைப் பற்றி எழுத அப்போஸ்தலனாகிய பவுலை ஏவியிருக்கிறார். அந்நேரத்தில், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும், அப்போது உயிரோடி ருக்கும் உண்மையுள்ள கிறிஸ்தவர்களும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படு வார்கள். இந்த மக்கள் யார்? கிறிஸ்துவின் ஒன்றான மெய்சபையின் அங்கத் தினர்கள்! ஆகாயத்தில் கர்த்தரோடு கூட எவ்வளவு காலம் இருப்பார்கள்? எப்பொழுதும்! இவ்விதமாய் நாம் மேகங்கள் மேல் அவர் களோடே கூட எடுத்துக்கொள்ளப்பட்டு எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருக்க வேண்டுமென்றால், பரலோகத்தின் நம்முடைய நித்தியத்தைக் கழிக்க வேண்டுமென்றால் நீங்களும், நானும் அந்த சபையிலே அதாவது, கிறிஸ்துவின் சபையிலே அங்கத்தினராக இருக்க வேண்டும்!.

தேவன் இதேக் கருத்தை 1 கொரிந்தியர் 15:24லும் வெளிப்படுத்தியி ருக்கிறார். 23 ஆம் வசனத்தில் தேவன் கிறிஸ்துவின் இறுதி வருகையைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். இந்த வசனத்தில் **முடிவு** என்கிற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். **முடிவு** என்பது நாம் அறிந்திருக்கிறபடி காலத்தின் முடிவாகும். அப்போது என்ன நடக்கும்? இயேசு ராஜ்ஜியத்தைப் பிதாவாகிய

தேவனிடத்தில் ஒப்புக்கொடுப்பார். நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி தேவன் **ராஜ்யம்** என்கிற வார்த்தையை **சபை**யை குறிப்பிடும்படி பயன்படுத்துகிறார். ஆகவே, நித்திய நித்தியமாக பிதாவாகிய தேவனிடத்தில் நாம் ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றால், நானும், நீங்களும் இயேசுவின் ஒன்றான மெய்சபையில் அங்கத்தினராக இருக்க வேண்டும்.

எபேசியர் 5:29யை வாசிக்கும்போது கிறிஸ்துவின் சபையின் ஒவ்வொரு உண்மையுள்ள உறுப்பினருக்கும் உற்சாகம் அளிக்கக்கூடிய அற்புதமான வார்த்தைகள் இடம் பெற்றிருக்கின்றன! கர்த்தர் சபையை போஷித்துக் காப்பாற்றுகிறார். இயேசு தம்முடைய ஆவிக்குரிய சரீரத்தின் உறுப்பினர்களை தம்முடைய வல்லமையான வார்த்தையினால் போஷிக்கிறார்.

வெளிப்படுத்தின விசேஷம் 1:11-13, 20 வசனங்களில் நம் ஆண்டவராகிய இயேசு ஏழு பொன் குத்துவிளக்குகளுக்கு மத்தியிலே இருப்பதாக அழகாக சித்தரிக்கப்பட்டிருக்கிறார். 20 வசனத்தின்படி இந்த ஏழு பொன் குத்துவிளக்குகளும் ஏழு சபைகள். இயேசு இன்னும் சபையின் மத்தியில் இருந்து சபையை போஷித்துக் காப்பாற்றுகிறது ஆறுதல் அளிக்கக் கூடியதும், உற்சாகப்படுத்துகிறதுமாயிருக்கிறதல்லவா!

அடுத்த மாதம், இயேசு ஸ்தாபித்த சபையில் அங்கத்தினராக இருப்பதன் முக்கியத்துவத்தையும், அந்த ஒன்றான மெய் சபையை அடையாளம் கண்டுகொள்வதற்கான நித்திய முக்கியத்துவம் பற்றி இன்னுமொரு வசனப்பகுதியைப் படிக்க நாம் உத்தேசித்திருக்கிறோம். அந்த வசனப்பகுதியில், பிரிவினை மதக் கூட்டத்தைப் பற்றிக் கடுமையாக, அதிர்ச்சி அளிக்கக்கூடிய வாக்கியங்களை அமைத்திருக்கிறார் அல்லது வார்த்தை களைப் பயன்படுத்தியிருக்கிறார். நமக்காகப் பாடுகள் பட்டு, இரத்தத்தை சிந்தி, மரித்த நம்முடைய நேசராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கூர்ந்து கவனிக்க விரும்புவீர்கள் என நான் அறிவேன்.

**BENNY MARTIN** **CHARLIE DI PALMA**


## உங்கள் பக்தி வாழ்வுக்குப் பலம் சேர்க்கும் ஆவிக்குரிய புத்தகங்கள் இலவசமாக

1. பரிசுத்த ஆவியானவரின் பணி
2. ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்
3. புதிய ஏற்பாட்டு ஆராதனை
4. நீங்கள் இருக்குமிடத்தில் கர்த்தருடைய சபையை ஆரம்பிப்பது எப்படி?
5. திருமறையில் பெண்ணின் பங்கு

**இப்புத்தகங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர், தபால் செலவுக்குத் தனித்தனியாக ரூ. 50/- M.O. செய்து பெற்றுக் கொள்ளலாம்.**

– ஆசிரியர்.

# கழுதையிடமிருந்து

உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். சென்ற மாத இதழில் பிலேயாமின் கழுதையை குறித்து அநேக காரியங்களை நாம் கற்றுக் கொண்டோம். இந்த இதழில் பிலேயாமின் கழுதை அந்த தீர்க்கதரிசிக்கு என்ன பாடத்தை கற்றுக் கொடுத்தது என்று பார்ப்போம்.

## I. உன் எஜமானுக்கு உண்மையாயிரு

பிலேயாமுக்கு அவனுடைய கழுதை கற்றுக் கொடுத்த பாடம். உன் எஜமானுக்கு (தேவனுக்கு) உண்மையாயிரு என்பதை தன்னுடைய செயல்பாடுகள் மூலம் உணர்த்தியது. அது எப்படியென்று நமக்குள்ளே கேள்வி எழும்பலாம். நம்முடைய வேத வசனங்களை கொஞ்சம் ஆழகமாக படித்து தியானித்தால் அதைக் கற்றுக்கொள்ளலாம். வசனத்தை பாருங்கள் தேவ தூதனானவர் பிலேயாமை கொல்வதற்கு பட்டயத்தை ஓங்கிய போது மூன்று முறை அவனை தப்புவித்தது (எண் 22:23,24,25) முடிவிலே தன் எஜமானை காப்பாற்றுவதற்கு அவனை சுமந்து கொண்டே கீழே படுத்துக் கொண்டது (22:27).

அதற்கு பின்பு தேவ தூதனானவர் பிலேயாமிடம் சொல்லும்போது, என்னைக் கண்டு இந்த கழுதை மூன்று தரம் விலகிற்று எனக்கு விலகாமல் இருந்ததானால் இப்பொழுது நான் உன்னைக் கொன்று போட்டு, கழுதையை உயிரோடே வைப்பேன் (எண் 22:33) என்றார். கழுதையை ஏன் உயிரோடு வைப்பேன் என்று தேவ தூதனானவர் சொல்லுவதற்கு காரணம் என்னவென்றால், அது தன் எஜமானுக்கு உண்மையுள்ள ஸ்தானபதியாக இருந்தது பிலேயாமை தப்புவித்தது. ஆனால், பிலேயாமோ உன்னதமான தேவனுடைய தீக்கதரிசியாக இருந்தாலும் அவருக்கும் அவருடைய சித்தத்திற்கும் உண்மையுள்ளவனாக இருக்கவில்லை. அதனால் தான் அவனை பட்டயத்தால் வெட்டும்படி தேவ தூதனானவர் அவனுக்கு எதிரியாகப் புறப்பட்டு வந்தார்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால் தேவன் தன்னுடைய பிள்ளைகளை தனக்கு உண்மையாய் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். யூதா தேசத்திலிருந்து அடிமையாக கொண்டு போகப்பட்ட சொப்பனத்தின் விளக்கவுரையாளன் தானியேலை பற்றி விவிலியம் இப்படியாக விளம்புகிறது "அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன் மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறையும் காணப்படவில்லை" (தானி. 6:4) என்று கூறுகிறது. தானியேல் பாபிலோனின் உயர் பதவியில் இருந்தாலும், அவன் தேவனுடைய காரியங்களில் உண்மையுள்ளவனா

யிருந்தான் தேவனை தொழுது கொள்கிற விசயத்திலும், உணவு முறைகளிலும் தேவனுக்கு பிரியமாய் நடந்து கொண்டான். அதனால் தான் தானியேலை தேவன் எல்லா இக்கட்டிலிருந்தும் பாதுகாத்து அவனை உயர்த்தினார். நாம் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக வாழ்ந்து வருகி றோமோ என்று நம்மை நாமே சோதித்து பார்க்க வேண்டும். ஏனென்றால், "உண்மையான ஸ்தானபதி தன்னை அனுப்பினவருடைய ஆத்துமாவை குளிரப்பண்ணுகிறான்" (நீதி 25:13) என்று வேத வசனம் கூறுகிறது.

நம்முடைய தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார் (2தீமோ 2:13) என்று நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம் அவரைப் போலவே நாமும் நம்முடைய வாழ்க்கையில் அவருடைய சித்தம் என்ன என்பதை வேதாக மத்தை கொண்டு அறிந்து அனுதினமும் தேவனுக்கு உண்மையாயிருப்ப தற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். அந்த கழுதை பிலேயாமுக்கு மட்டும் அல்ல நமக்கும் "உன் எஜமானுக்கும் உண்மையுள்ளவனாயிரு" என்று கற்று தருகிறது. மேலும், அந்த கழுதை பிலேயாமுக்கு என்ன பாடத்தை கற்றுக் கொடுத்தது என்பதை பார்ப்போம்.

## II. உன் எஜமானுக்கு கீழ்ப்படிந்திரு

நீங்கள் மேலே உள்ள தலைப்பை பார்த்து கழுதை எப்படி "உன் எஜமானுக்கு கீழ்ப்படிந்திரு" என்று சொல்ல முடியும் என்று யோசிக்கிறீர்களா? இதை நான் சொல்லவில்லை வேத வசனமே சொல்கிறது கவனியுங்கள் கழுதை அவனை தப்புவிக்கும்படியாக கீழேபடுத்து கொண்டபோது "கழுதையை பிலேயாம் அடித்தான் (எண் 22:27) அப்பொழுது தேவன் கழுதையின் வாயை திறந்தார் கழுதை பிலேயாமோடு பேசினது, என்ன பேசினது என்று வேதாகமமே கூறுகிறது கவனியுங்கள்" நீர் என்னைக் கைக் கொண்ட கால முதல் இந்நாள் வரைக்கும் நீர் ஏறின கழுதை நான் அல்லவா? இப்படி உமக்கு எப்போதாகிலும் நான் செய்தது உண்டா என்றது, அவன் இல்லை என்றான் (எண் 22:30) இந்த வசனத்தை கூர்ந்து கவனிப்போம் என்றால் ஓர் உண்மை விளங்கும் அது என்னவென்றால் பிலேயாம் அதைக் கைக்கொண்ட நாள் முதற்கொண்டு அது அவனுக்குக் கீழ்ப்படிந்து இருந்தது என்பது விளங்கும், அதை தான் கழுதை தன்னுடைய வார்த்தைகளின் மூலமாக "நான் உமக்கு கீழ்ப்படிந்து நடக்கிறேன் அதுபோல நீரும் உன் எஜமானுக்கு (தேவனுக்கு) கீழ்ப்படிந்து இரு" என்று மறைமுகமாக உணர்த்தியது.

அதனால் தான் பேதுரு ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு இந்த பிலேயாமைக் குறித்து சொல்லும் போது செம்மையான வழியை விட்டுத் தப்பி நடந்து பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப்போனவர்கள்; அவன் அநீதத்தின் கூலியை விரும்பி, தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டான், பேசாத மிருகம் மனுஷர் பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது (2பேதுரு 2:15,16) என்கிறார். பிலேயாம் தேவனுக்குக் கீழ்ப்படி

யாமல் அதை மீறுவதற்கு முயற்சி செய்தான், அதை தேவ தூதனானவர் சொல்லும் போது உன் வழி எனக்கு மாறுபாடாயிருக்கிறதினால் எதிரியாக புறப்பட்டு வந்தேன் (எண் 22:32) என்று கூறுகிறார். இந்த வசனத்தில் தேவ தூதனானவர் சொல்ல வருகிறது என்னவென்றால் நீ எனக்கு கீழ்ப்படியாமல் இருக்கிறதினாலே உன் வழி மாறுபாடாயிருக்கிறது என்று உணர்த்தினார்.

இன்றைக்கும் தேவன் நம்மிடத்தில் அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிய வேணடும் என்று தான் விரும்புகிறார். நமக்கு முன்னோடின வராகிய கிறிஸ்து சிலுவையின் மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராய் இருந்தார் (பிலி. 2:8) என்று வசனம் கூறுகிறது. இஸ்ரவேல் என்னும் மதிகெட்ட ஜனம் தேவனுடைய வார்த்தையை மதிக்கு எட்டாமல் செய்து கீழ்ப்படியாமை யினாலே கானானை காண முடியாதபடிக்கு அழிந்து போனதை உங்களுக்கு விளக்க வேண்டிய அவசியமில்லை ஏனெனில், அவர்களை குறித்து நாம் நன்றாகவே அறிந்து இருக்கிறோம். அதனால் தான் தமஸ்கு சாலையில் பரமனை தரிசித்து இரட்சிப்புக்கு கீழ்ப்படிந்த பவுல் எபேசு பட்டணத்தின் சபைகளுக்கு சொல்லும்போது கீழ்படியாமையின் பிள்ளைகளின் மேல் தேவ கோபாக்கினை வரும் (எபே 5:6) என்று எச்சரித்து எழுதுகிறார்.

எரேமியா தீர்க்கன் தீர்க்கமாக, "வழிகளிலே நின்று பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து நல்ல வழி எங்கே என்று பார்த்து அதிலே நடவுங்கள்" (எரே 6:16) என்று உறுதியாக எச்சரிக்கிறார். இன்று வீதிக்கு பல மளிகைகடை இருப்பது போல வீதிக்கு பல சபைகளை சுயமான பெயரிலே வைத்துக்கொண்டு தேவனுடைய வார்த்தையை விற்று விருந்தாக்கி சாப்பிடும் வெள்ளங்கிகாரர்களும் வேதாகமத்தின் இரட்சிப்பின் திட்டத்தை ஒருபோதும் புரிந்து கொள்ளாத பாஸ்டர்களும் காப்பு நாடாக்களை அரையிலே கட்டிக் கொண்டு காசுக்காக திரியும் கூட்டங்களும், தேவனையும் அவருடைய ஆசீர்வாதங்களையும் குத்தகைக்கு எடுத்த பெரிய பெரிய கள்ள தீர்க்கதரிசிகளும், பங்களார் திட்டத்தை போட்டு தங்கள் பையையும் வயிறையும் நிரப்பி ஏப்பம் விடும் கூட்டங்கள் இன்று அநேகம். அவர்களை நீங்கள் அடையாளம் கண்டு அவர்களிடமிருந்து விலகி ஆரோக்கியமான உபதேசத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுலைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்து கொள்ளுங்கள்" (1தெச 5:21) என்கிறார். மேலும் "நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவைகளைப் பேசு" (தீத் 2:1) என்கிறார் அந்த ஆரோக்கியமான உபதேசத்திற்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும்.

அந்த ஆரோக்கியமான உபதேசம் என்னவென்றால், கிறிஸ்து இந்த உலகத்தில் இருக்கும்போது என் சபையை கட்டுவேன் என்றார் (மத். 16:16-18) அந்த சபை எந்த சபை? அந்த சபையை மட்டுமே பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ளாது என்று இயேசு கூறினார். அந்த சபைக்காக இயேசு

கிறிஸ்து தம்முடைய சுய ரத்தத்தை சிந்தி சம்பாதித்தார் (அப். 20:28) அந்த சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த சபை ஸ்தாபிக்கப்பட்டபோது சுமார் 3000 பேர் ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டு அதிலே சேர்க்கப் பட்டார்கள் (அப். 2:41) அந்த சபையை பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரிக்கு எழுதும்போது அது கிறிஸ்துவின் சபை (ரோம 16:16) என்று எழுதுகிறார். அந்த சபையென்னும் ராஜ்ஜியத்தைத்தான் கிறிஸ்து உலகத்தின் முடிவில் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்க போகிறார் (1கொரி. 15:24)

நீங்கள் இருக்கின்ற சபை இப்படிப்பட்ட அடிதளத்தை கொண்டுள்ளதா? ஒருவேளை இல்லையென்றால் கிறிஸ்து இரண்டாம் வருகையில் உங்களுக்கு எதிராளியாக நிற்பதற்கு முன்பாக ஆரோக்கியமான உபதேசத்திற்கு கீழ்ப்படியுங்கள். அப்பொழுது நித்திய இரட்சிப்பை பெறுவீர்கள். பிலேயாமுக்கு தேவன் கழுதை மூலமாக கற்றுக்கொடுத்த பாடத்திற்கு அவன் மனந்திரும்பவில்லை அவன் செய்த பாவத்தினிமித்தம் "பட்டயத்தால் கொலை செய்யப்பட்டான்" (எண் 31:8) என்று வேத வசனம் கூறுகிறது.

பிரியமானவர்களே நாமும் இன்னும் நம்முடைய மனந்திரும்பாத வாழ்க்கையில் இருப்போமானால் வரும் தேவ கோபத்துக்கு தப்பித்துக் கொள்ள முடியாது. மனந்திரும்புவோம், ஆசீர்வாதங்களை பெறுவோம், தேவன் தாமே வரக்கூடிய புது வருடத்திலே உங்களோடு இருந்து காப்பாராக ஆமென்.

**N. பர்னபாஸ்,** திருப்பூர்.

## நாளும் நடப்பும்

1. கப்பலில் இருந்து சென்று தாக்கும் ஏவுகனையை பாகிஸ்தான் சோதித்து பார்த்தது.
2. இந்தியாவில் கார் விற்பனை அமோகம். பைக் விற்பனை சரிவு.
3. இலங்கை இராணுவம், விடுதலைப்புலிகள் கடும் மோதல் 37 புலிகள் 7 வீரர்கள் சாவு.
4. கார் கண்ணாடிகளில் கருப்புத்தாள் ஒட்ட தமிழக அரசு தடை விதித்துள்ளது.
5. ஒரே நேரத்தில் 20 பேரைக் கொல்லும் ஆற்றலுடைய விஷம் கொண்ட மிகப்பெரிய நாகம் கென்யாவில் கண்டுபிடிக்கப்பட்டது.
6. ஈரோடு, திருப்பூர் மாநகராட்சியாக மாற்றம். அரசு உத்தரவு.
7. இஸ்ரவேல் சிறையில் இருந்து 429 பாலஸ்தீனியர்கள் விடுதலை.
8. பாகிஸ்தானுடனான கிரிக்கெட்டில் இந்தியா ஒரு தின போட்டிக்கான கோப்பையையும் டெஸ்ட் தொடருக்கான கோப்பையையும் கைப்பற்றியது.

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த மாதம் 12 அப்போஸ்தலரில் தைரியசாலியான அந்திரேயாவைக் குறித்தும் அவரது தியாக மரணத்தைக் குறித்தும் அறிந்து கொண்டோம். இந்த மாதத்தில் அப்போஸ்தலனாகிய பிலிப்புவைக் குறித்தும், அவர் இரத்த சாட்சியாகக் கொல்லப்பட்டதைக் குறித்தும் அறிந்து கொள்வோம்!.

## பாடம் - 5. பிலிப்பு

பரிசுத்த வேதாகமத்தில் பிலிப்பு எனும் பெயருடையவர்கள் மூன்று பேர்கள் உள்ளனர். அவர்களில் முதலாவது அப்போஸ்தலன் பிலிப்பு, இரண்டாவது சுவிசேஷகனான (Evange list) பிலிப்பு. இவர் சபை விசாரணைக் காரர் ஏழு பேர்களில் ஒருவர் (அப். 6:1-5) சவுலினால் சபைக்கு துன்பம் வந்த போது அநேகர் சிதறிப்போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர் (அப். 8:4) அவர்களில் பிலிப்பு எனும் சுவிசேஷகன் சமாரியாவுக்குச் சென்று மாயவித்தைக்காரன் சீமோனுக்கும், பின்பு எத்தியோப்பிய மந்திரிக்கும் சுவிசேஷத்தைக்கூறி ஞானஸ்நானம் கொடுத்தார் (அப். 8:9-13, 26:38) இவருக்கு திருமணமாகி நாலு குமாரத்திகள் இருந்தனர் பவுல் இவர்களை சந்தித்துள்ளார் (அப். 21:8-10)

மூன்றாவதாக இப்பெயருடையவர் ஏரோதின் சகோதரன் பிலிப்பு. இவன் யூதனல்ல ரோம அரசாங்கத்திலுள்ள ஒரு அதிகாரி (Governor) இவன் யோவான் ஸ்நானகனின் நாட்களில் இருந்தவன் (லூக். 3:1) சரி நாம் அப்போஸ்த லனாகிய பிலிப்புவைக் குறித்து படிப்போம்.

### I. பிலிப்புவின் வாழ்க்கைக் குறிப்பு

இவரைக் குறித்து நான்கு சுவிசேஷ புத்தகங்களின் ஆசிரியர்கள் குறிப்பிட்டிருந்தாலும், அதிகமாக அதாவது, ஏறக்குறைய சுமார் 10 முறை யோவான் குறிப்பிட்டிருக்கின்றார். (யோ 1:43-46, 6:5,7, 12:22, 14:8,9) ஒருவேளை யோவான் பிலிப்புவின் நண்பராக இருந்திருக்கலாம். பிலிப்பு, இயேசு கிறிஸ்துவினால் நேரிடையாக அழைக்கப்பட்ட அப்போஸ்தலன் (யோ. 1:43) சொந்த ஊர் பெத்சாயிதா. பேதுரு, அந்திரேயா மீனவர்களாக இருந்தது போலவே இவரும் அவர்களுடன் மீன் பிடிக்கும் தொழில் செய்யும் செம்படவன்.

பிலிப்பு என்பதின் பொருள் Lover of Horses என்று சொல்லப்படுகிறது. இவர் யூதனாக இருந்தாலும் இவரது பெயர் பொதுவானதாக இருக்கிறது. இவரும் யோவான் ஸ்நானகனின் பிரசங்கத்தினால் மனந்திரும்புதலுக்கென்று

ஞானஸ்நானம் பெற்றவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவாகிய மேசியாவுக்காக காத்திருந்திருக்கிறார் (யோ 1:34-43).

## II. பிலிப்புவின் குணாதிசயம்

வேத வாக்கியங்களை ஆராய்ந்து படிக்கிறதினால் நற்குணசாலியாக கண்டிப்பாக இருக்க முடியும் (அப். 17:11) இதன்படி பிலிப்பு எப்பொழுதும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து அறிகிறவர். எப்படியென்றால் இயேசுவைக் குறித்து நாத்தான்வேலிடத்தில் கூறும்பொழுது நியாயப் பிரமாணத்திலே மோசேயும், தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம். அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றார் (யோ 1:45) பிலிப்பு ஒரு பெரிய கல்விமானல்ல. அவர் கிரேக்கர்களிடம் நட்பு வைத்திருந்தாகத் தெரிகிறது (யோ 12:20-22) கிரேக்கர்கள், கல்விமான்களும், ஆராய்ச்சியாளர்களுமாக இருந்தபடியால் அவர்களிடம் சிறிதளவு கல்வி கற்றிருக்க வாய்ப்பு உண்டு. அந்த கல்வி அறிவில் வேத வாக்கியங்களை ஆராய்ந்து படித்திருக்கின்றார்.

இன்றைய நவநாகரீக உலகில் நாம் வசித்து வருகின்றோம். நாம் படிக்கின்ற காரியத்தில் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கின்றோம். பல பட்டங்களைப் பெறுகின்றோம். இவ்வுலகிற்கு இவைகள் தேவை என்பதை நாம் அறிகின்றோம். ஆனால், நித்திய ஜீவனுக்கு தேவையாக இருக்கின்ற வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க விரும்புவதில்லை (யோ 5:39) இதற்குக் காரணம் நமது சோம்பேறித்தனமேயன்றி வேறு எதுவுமில்லை. வேதத்தை ஆராய்ந்து பார்க்கும் குணம் நமக்குத் தேவையாக இருக்கிறது ஏனென்றால், அவைகள் அதாவது வேத வசனங்கள் நம்மை நற்குணசாலி களாக மாற்றுகிறது.

பிலிப்பு வேத வாக்கியங்களை மட்டும் ஆராயக்கூடியவரல்ல மற்ற காரியத்தையும் ஆராயக்கூடியவர் என்பதை ஆண்டவராகிய இயேசு அறிந்த படியால், அவனை சோதிக்கும்படியாக திரளான ஜனங்கள் இருக்கிறார்கள் இவர்கள் சாப்பிடத்தக்க அப்பங்களை எங்கே வாங்கலாம் என்று கேட்டார். உடனே பிலிப்பு ஜனங்களை ஆராய்ந்து பார்த்து எண்ணத் தொடங்கி இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொண்டாலும் இருநூறு பணத்து அப்பங்கள் இவர்களுக்குப் போதாதே என்றான் (யோ. 6:5,7).

இன்னொரு சமயத்தில் இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்கு கடைசியாக அறிவுரை சொல்லும்பொழுது, பிலிப்பு அவரை நோக்கி ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான். அதற்கு இயேசு, பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான். அப்படியிருக்க பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று எப்படிச் சொல்லுகிறாய்? என்று கடிந்து கொண்டார் (யோ 14:8,9).

அருமையானவர்களே, நாம் வேத வாக்கியங்களை மட்டுமே ஆராய வேண்டும். வேறு காரியத்தையோ, வேறு ஆகமத்தையோ அல்ல! ஏனென்றால், விசுவாசம் வேத வசனத்தின் மூலமாகத்தான் வரும் (ரோ. 10:17) விசுவாசத்தினால் வராத யாவுமே பாவமாகும் (ரோ. 14:23).


**III. பிலிப்புவின் ஊழியமும் இரத்த சாட்சியாகக் கொல்லப்படுதலும்.**

"ஊழியம்" என்ற வார்த்தையின் பொருள் சேவை என்பதுதான் தன்னைத்தானே அர்ப்பணித்து செய்ய வேண்டியது. இதில் லாபங்களை அல்ல நஷ்டங்களைத்தான் எண்ணி சந்தோஷப்படவேண்டும். அநேகருடைய ஊழியம் நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான்களைப் போல திடீரென்று இலாபத்திற்காக ஊழியத்தை ஆரம்பித்து பின்பு அட்ரஸ் இல்லாமல் காணாமல் போவதாக உள்ளது. இப்படிப்பட்ட ஊழியம் அர்ப்பணிப்பு இல்லாதது. ஆனால், மக்கள் மத்தியில் இப்படிப்பட்ட ஊழியத்திற்குத்தான் வரவேற்பு அதிகமாக உள்ளது. அர்ப்பணிப்போடு செய்யப்படும் ஊழியத்திற்கு வரவேற்பு மிக மிக குறைவுதான்.

அப்போஸ்தலர்கள் அனைவரும் அர்ப்பணிப்போடு ஊழியம் செய்தனர். ஆனால் அதற்கு எதிர்ப்புகளும் போராட்டங்களும் அதிகமாகக் காணப்பட்டது. பிலிப்புவும் பெரும் அர்ப்பணிப்போடு ஊழியத்தைச் செய்தார். அவர் ரஷ்ய பகுதியிலுள்ள சைத்தியாவுக்குச் சென்று சுமார் 20 ஆண்டுகள் ஊழியம் செய்திருப்பதாக நம்பப்படுகிறது. பின்பு ஏராப்போலி (கொலோ 4:13) என்ற பட்டணத்தில் தங்கி ஊழியம் செய்துள்ளார். இந்தப் பட்டணம் கொலோசே பட்டணத்திலிருந்து சுமார் 16 மைல் தொலைவில் உள்ளது. சிறிய ஆசியா பகுதியில் உள்ளது. இது சுக வாசஸ்தலம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு வெதுவெதுப்பான நீர்வீழ்ச்சி இருப்பதால் எல்லா திசைகளிலிருந்தும் மக்கள் வருவார்கள். இந்த ஏராப்போலியார் போலியான தெய்வ வழிபாட்டுக்காரர்கள். ஒரு பெரிய சர்ப்பத்தை விக்கிரகமாக வடிவமைத்து அது கடவுளின் அவதாரம் என்று நினைத்து வழிபட்டனர். பிலிப்பு அவர்களுடைய அறியாமையை சுவிசேஷத்தினால் போக்கினார். அநேகர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்ததாக நம்பப்படுகிறது. இதன் காரணமாக பிலிப்புக்கு பல எதிர்ப்புகள் வந்தன. குறிப்பாக சர்ப்ப பூசாரிகள் ஆத்திரமடைந்து பிலிப்புவை சிறையில் தள்ளுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். எப்போதுமே அரசாங்கம் பூசாரிகளுக்கு ஜால்ரா போடும். அதன்படி பிலிப்புவை அப்போதுள்ள ரோம அரசாங்கம் கைது செய்து சிறையில் அடைத்து துன்பப்படுத்தினார்கள் என்று சொல்லப்படுகிறது. இறுதி தீர்ப்பு பிலிப்புவை சிலுவையில் அறைய வேண்டும் என்று கொடுக்கப்பட்டது. அதன்படி பிலிப்புவை 87 வது வயதில் சிலுவையில் அறைந்தார்கள். ஜனங்கள் அவரை சிலுவையில் இருக்கும்போதே கல்லால் அடித்துக் கொன்றனர். பிலிப்பு இப்படி இரத்த சாட்சியாகக் கொல்லப்பட்டார்

(தொடரும்)

**K. பாஸ்கர், சிறுமுகை.**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

**Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures**

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postel Registration No. Erode / 26 / 2006 - 2008
Posted at Erode HPO on 20 th or 21 st of Every Month

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம்
நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




தமிழன் TV சனி காலை 7:15 - 7:30

தமிழன் TV ஞாயிறு இரவு 9:45 - 10:00

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

**Advanced Bible Correspondence Course**

ஆம், சத்தியம் விரும்பிகளுக்கும், பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்கும் பாக்கியம் வாழ்க்கையில் கிடைக்காமல் போய்விட்டதே என்று ஏங்குபவர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பு.

வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு: எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.**
**தமிழ்நாடு. இந்தியா.**

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.
Ph : 04257 - 222955, 222555